விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 06 செவ்வாய்க்கிழமை (22.07.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 215

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# காணி அளவீடு மக்கள் எதிர்ப்பு

## திரும்பிச் சென்றனர் அதிகாரிகள்



(யாழ்ப்பாணம்)

**யாழ்.அச்சுவேலியில் படைமுகாம் அமைக்கும் நோக்குடன் சுவீகரிக்கப்படவுள்ள பொது மக்களின் காணிகளை அளவையிட பொலிஸார் சகிதம் நேற்றுத் திங்கட்கிழமை சென்ற நில அளவைத் திணைக்களத்தினரை மக்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர். இதனால் காணி அளக்கும் முயற்சிகள் கைவிடப்பட்டன.**

அச்சுவேலி இராச வீதியில் இராணுவ முகாம் அமைக்கும் நோக்கில் 53 பரப்புக் காணிகளை அளவீடு செய்ய நேற்றுத் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட முயற்சியினை பொதுமக்கள் தடுத்துப் போராட்டம் மேற்கொண்டதில் அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவுகின்றது.

மேற்படி பகுதியில் 9 குடும்பங்களுக்குச் சொந்தமான 53 பரப்புத் தோட்டக் காணிகள் கடந்த யூன் 2-ம் திகதி நிலஅளவைத் திணைக்கள அதிகாரிகள் அளவீடு செய்ய முற்பட்ட போது, அதனை பொதுமக்கள் போராட்டம் நடத்தித் தடுத்திருந்தனர்.

இந்நிலையில், நேற்றுத் திங்கட்கிழமை பொலிஸாரின் பாதுகாபபுடன் மீண்டும் 20ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த-சுவாமி சந்திப்பு



(கொழும்பு)

இலங்கையுடன் சிறந்த உறவைப் பேணுவதற்கு இந்திய பிரதமர் மோடி விரும்புவதாக ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மகிநத ராஜபக்ஷவை, சுப்பிரமணியம் சுவாமி நேற்று சந்தித்து 20ஆம் பக்கம் பார்க்க....

## ஆறு ஆண்டுகள் பணிபுரிந்தால் போதும்

(யாழ்ப்பாணம்)

ஆறு ஆண்டுகள் பணிபுரிந்தாலே போதும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் இடமாறறத்திற்கு விண்ணப்பிக்க முடியும் என மாகாணக் கல்விக்குழுவில் விசேட தீர்மானம் ஒன்று நேற்று எடுக்கப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக பணியாற்றவேண 20ஆம் பக்கம் பார்க்க....


## தீ விபத்து: பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

பெற்றோல் போத்தல் வெடித்து சிதறியதால் ஏற்பட்ட தீயினால் படுகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பபெண்ணொருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி வட்டக் 20ஆம் பக்கம் பார்க்க....

### இரண்டாவது தடவையாகவும்

## வடக்கு மாகாண ஆளுநராக ஜி.ஏ.சந்திரசிறி பதவியேற்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநராக இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தனது கடமைகளை நேற்று உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொணடார்.

யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் உள்ள வடக்கு மாகாண ஆளுநரின் அலு 20ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும்

### அமைச்சர் டியூ கருத்து

(கொழும்பு)

நாட்டில் நிறைவேற்று அதிகாரம்மிக்க ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் அமைச்சர் டியூ குணசேகர காரசாரமான முறையில் தனது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் மிகுந்த அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்க வேண்டும் என்ற குரல் அண்மைக்காலமாக ஆளுங்கட்சி மற்றும் எதிரணி பிரமுகர்களிடமிருந்து ஒலித்துவருகின்றது.

இடதுசாரித் தலைவர் டாக்டர் என்.எம்.பெரேரா மரணப் படுக்கையில் இருந்து 20ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா சர்வதேச விசாரணைக் குழுவிற்கு தெற்காசிய நாடுகள் விசா மறுப்பு

### இலங்கைக்கு இது பெருவெற்றி என்கிறார் மஹாநாம

(கொழும்பு)

இலங்கை மீது சர்வதேச விசாரணையை தொடுக்கவுள்ள ஐ.நா. நிபுணர் குழுவின் வருகைக்கு தெறகாசிய நாடுகள் விசா வழங்க மறுத்துள்ளமை இலங்கைக்கு கிடைத்துள்ள மிகப்பெரிய வெற்றியாகுமென மனித உரிமைகள் சட்டத்தரணி டாக்டர் பிரதீப மஹாநாம தெரிவித்தார்.

இலங்கை மீதான சர்வதேச விசாரணைகளுக்கான நிபுணர் குழு இலங்கைக்குள் வருவதற்கு அனுமதிக்க கூடாது என்றும் பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவிபிள்ளை [illegible]யிலான நிபுணர்கள் குழு, விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்காது என்பதனை புரிந்து கொண்டவர்களாக, அயல் நாடுகளில் விசா கோரும் முயற்சியில் இறங்கினர்.

அந்த வகையில் இலங்கைக்கு மிகவும் அண்மித்த நாடான இந்தியாவிலிருந்து விசாரணைகளை [illegible] 20ஆம் பக்கம் பார்க்க....

### சிறுமிமீது சிப்பாய் வன்புணர்வு

## நேரடியாக ஆராயுமாறு நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் கடற்படைச் சிப்பாயினால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பாடசாலை சிறுமியினது வதிவிடம், பாடசாலைக்கு சென்றுவரும் பாதை மற்றும் அது தொடர்பான விபரங்களை நேரடியாக ஆராயுமாறு யாழ்.சிறுவர் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

காரைநகர் களபூமி ஊரியினைச் சேர்ந்த 11 வயது பாடசாலைச் சிறுமியொருவரினை காரைநகர் கடற்படைச் சிப்பாயொருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியிருந்தார்.

இச்சம்பவத்தோடு தொடர்புடைய ஏழு கடற்படைச் சிப்பாய்கள் காரைநகர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.சிறுவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

இவ்விசாரணையில் சந்தேகநபர்கள் அடையாள அணிவகுப்பில் விடப்பட்டு சிறுமியால் அடையாளம் காணவிடப்பட்டது. 20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(C-8050)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**வாகனம் ஒன்றை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்வி பத்திரம் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகர் கிளிநொச்சியில் உள்ள பொறியியல் பீடத்தின் பாவனைக்காக மாதாந்த கொடுப்பனவு அடிப்படையில் வான் ஒன்றை வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. வாகனத்தின் முதற்பதிவு 05 வருடங்களுக்கு மேற்படாமலும் வாகனத்தின் உற்பத்தி காலம் 07 வருடங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

வெற்றி பெறும் மனுதாரர் எரிபொருளுடன் வாகனத்தை வழங்கும்படி வேண்டப்படுவார்

| வாகன வகை | எரிபொருள் வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| பயணிகள் வான் (14 அல்லது 15 ஆசனங்கள்) அல்லது அதற்கு மேல் | டீசல் (dual A/C) | 01 |

விண்ணப்பப்படிவம் மற்றும் விலைமனு ஆவணங்களையும் மேலதிக விபரங்களையும் 06.08.2014 மதியம் 12.00 மணி வரை சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகக்கிளை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/- ஐ பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் அல்லது மக்கள் வங்கியின் கணக்கிலக்கம் 162100160000880 இற்கு செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வான் ஒன்றை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி" என அடையாளமிடப்பட்டு 11.08.2014 பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் தலைவர் கேள்விச்சபை, த.பெ. எண் 57, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படலாம் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படலாம்.

கேள்வி விண்ணப்பங்கள் 11.08.2014 அன்று பி.ப 2.30 மணிக்கு பரிசீலிக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமுகமளிக்கலாம். கேள்விச் சபையின் முடிவே இறுதியானது

**தலைவர்**
**கேள்விச் சபை**
**யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.**
**21.07.2014**

(சி-7954)

## post of Technical Assistants for a research project

Applications are invited for the post of full time technical assistants(2) in a research project for 11 months at the Department of Zoology, University of Jaffna. The project is funded by International Union for Conservation of Nature. Candidates should have at least 3 passes in G.C.E A/L examination and with knowledge in biology (prior work experience in Biodiversity is preferable)

An application with the complete Bio data should reach Dr.T.Eswaramohan, principal investigator, Senior Lecturer, Department of Zoology, University of Jaffna (e-mail:teswaramohan@gmail.com) on or before 30th July 2014 to my address by post or e-mail. Selected candidate will be paid Rs 13,500/= per month.

**Registrar**

(C-7953)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව
## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA CHUNNAKAM

*My No :Np/14/41(15)/01/Tender/2014* — *Date: 21.07.2014.*

# விலைக்கேள்விக்கான கோருதல்

01.தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், யாழ்ப்பாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை திறந்த போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோரப்படுகின்றது.

02.கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். வீதி வேலை தவிர்ந்த ஏனைய வேலைகளுக்கு தகுதி வாய்ந்த தயாரிப்பாளர்கள், நிறுவனங்கள், விநியோகிஸ்தர்கள் பதிவுச்சான்றிதழ் சமர்ப்பித்து விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.

03.ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (தொலைபேசி: 0212240017, மின்னஞ்சல் chairmanvsps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை. 22.07.2014ம் திகதி தொடக்கம் 12.08.2014ம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

04.ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்களினால் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி படிவத்தினை தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி: 0212240017, மின்னஞ்சல் vspsch@gmail.com web:- vsps.lk) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச்சமாப்பித்து 22.07.2014 முதல் 12.08.2014 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**1000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

05.விலைக்கேள்விகள் 13.08.2014ம் திகதியன்று 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மூலப் பிரதியை தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கும் அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும் உரிய காலத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி விபரத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் 13.08.2014 ஆம் திகதியன்று 2.00 மணிக்கு விலைக்கேள்விகள் திறக்கப்படும்

06.கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 01.08.2014 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்

07.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். குறித்த தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | குளத்தடி நாச்சிமார் கோயில் வீதி திருத்தம் | 3.916 | 03 மாதங்கள் | M7/C8 | 39,200.00 |
| 02 | அலுவலக மாநாட்டு மண்டப கதவு, யன்னல்களின் மறைப்பு, நிலவிரிப்புகளை விநியோகித்து பொருத்துதல் | 0.990 | 01 மாதம் | தகுதி வாய்ந்த நிறுவனம்/ தயாரிப்பவர்கள் | 10,000.00 |
| 03 | அலுவலக மாநாட்டு மண்டப கதிரைகளை விநியோகித்தல் | 1.762 | 01 மாதம் | தகுதி வாய்ந்த விநியோகிஸ்தர்கள் | 17,600.00 |
| 04 | மாநாட்டு மண்டப மேசைகள் (MDF Board), மேடை பேச்சாளர் பேச்சு நிறுத்திகள் (Spech Stand) விநியோகித்தல் | 0.580 | 01 மாதம் | தகுதி வாய்ந்த நிறுவனம்/ தயாரிப்பவர்கள் | 8,000.00 |
| 05 | மாநாட்டு மண்டப மேசைகள் (Melamine Sheet), மேடை பேச்சாளர் பேச்சு நிறுத்திகள் (Spech Stand) விநியோகித்தல் | 0.780 | 01 மாதம் | | |
| 06 | அலுவலக மாநாட்டு மண்டப ஒலிபெருக்கி உபகரணங்கள் விநியோகித்து பொருத்துதல் | 2.223 | 01 மாதம் | தகுதி வாய்ந்த நிறுவனம், | 22,200.00 |
| 07 | அலுவலக மாநாட்டு மண்டப வளிச்சீராக்கி உபகரணங்கள் (AC) விநியோகித்து பொருத்துதல் | 1.000 | 01 மாதம் | தகுதி வாய்ந்த நிறுவனம் விநியோகிஸ்தர்கள் | 10,000.00 |

**[illegible]**
**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்**

(சி-7955)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விடயத்தில் தலையிட தலாய்லாமாவுக்கு உரிமையில்லை

## சோபித தேரர் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையில் பௌத்தர்களை காப்பாற்ற சிறந்த தலைவர் இல்லாது போய்விட்டார். முஸ்லிம் தீவிரவாதிகள் கிளர்ச்சிகளை மேற்கொண்டாலும் சிங்கள பௌத்தர்கள் தான் அடக்கு முறைகளை கையாள்கின்றனர் என சர்வதேச அளவில் கருத்து பரப்பப்படுகின்றது என தெரிவிக்கும் ஓமல்பே சோபித தேரர் இலங்கை விடயத்தில் தலையிட தலாய்லாமாவிற்கு உரிமை இல்லை. அவர் பௌத்த மதத்திற்கு தலைவர் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பௌத்த மத நிகழ்வில் உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் பௌத்த மதம் அழிந்துக் கொண்டு செல்கின்றது. பௌத்த கொள்கைகளையும் சிங்கள பௌத்த மக்களையும் காப்பாற்ற யாரும் இல்லை. இன்று சர்வதேச அளவில் இலங்கை குற்றவாளி நாடாக சித்திரிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் முஸ்லிம் குழுக்களின் மோதல்களையும் சிங்கள மக்களுக்கெதிரான முஸ்லிம் பிரிவினைவாதக் குழுக்களின் அடாவடித்தனங்களையும் சர்வதேசம் கண்டுகொள்ளவில்லை. மாறாக நாட்டில் பௌத்த பேரினவாத சக்தி சிறுபான்மை மக்களை அடக்குகின்றது என்ற கருத்தினையே சர்வதேச அரங்கில் முன்வைக்கின்றனர்.

அதை எதிர்த்து கருத்து வெளியிட நாட்டில் சிறந்த மதத் தலைவர்கள் இல்லாது போய்விட்டார்கள். பௌத்த மதத்தின் பாதையில் நாட்டை இட்டுச் செல்ல நல்லதொரு தலைவர் இல்லாது போய்விட்டார்.

அரசியல் ரீதியில் பேசும் தலைவர்கள் மதம் சார்ந்தும் பௌத்தத்தை பாதுகாக்கும் நோக்கிலும் இந்த நாட்டின் உண்மை நிலைமையினை சர்வதேச அளவில் கொண்டு செல்ல முடியாது போயுள்ளது. எமது நாட்டின் மீது குற்றம் கூற இன்று சர்வதேச அளவில் தலைவர்கள் உருவாகி விட்டார்கள். திபெத்திய பௌத்த மதத் தலைவர் தலாய்லாமா கூட இலங்கையில் பௌத்த தீவிரவாதம் தலை தூக்கியுள்ளதென அறிக்கை விடுத்துள்ளார்.

இங்கு முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் எனவும் தெரிவித்தார். இவரின் கருத்தை பௌத்த மதத்தின் கருத்தாகவும் பௌத்த மத தலைவரின் கருத்தாகவும் எண்ணி சர்வதேச ஊடகங்கள் இலங்கையின் மீது தவறான கோணத்தில் கருத்து வெளியிடுகின்றன. உண்மையிலேயே தலாய்லாமா என்பவர் பௌத்த மதத்தில் உள்ள பிரிவுகளில் ஒரு பிரிவின் தலைவர் மட்டுமே. அவரைப்போல் பலர் இருக்கின்றார்கள். எனவே அவரின் கருத்தை முக்கிய கருத்தாக கருதுவது அர்த்தமற்றது.

அதேபோல் இலங்கையின் உண்மை நிலைமை புரியாது இலங்கையில் என்ன நடக்கின்றது என்று தெரியாது அவர் கருத்து வெளியிடுவது தவறானது. மேலும் இந்த நாட்டில் பௌத்த கொள்கையை பாதுகாக்க, சிங்கள மக்களை பாதுகாக்க சிறந்த பௌத்த மத தலைவர் ஒருவர் உருவாக வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (6)

# வீடு தீக்கிரை

நோட்டன் பொலிஸ் பிரிவு ஒஸ் போன் பங்களா டிவிசனில் வீடொன்று தீக்கிரையாகியுள்ளதாகவும் இதனால் ஒரு இலட்சம் ரூபாய் பொருட்கள் சேதமாகியுள்ளதாகவும் நோட்டன் பிரிட்ஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வீட்டில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் திடீரென தீப்பற்றிக் கொண்டதாகவும் அயலவர்களின் உதவியுடன் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இத் தீ விபத்தினால் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

இவ்விபத்து தொடர்பில் நோட்டன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6)


## ஆயுள்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!

❖ நீங்கள் முகப்பரு, சூரிய வெப்பத்தால் ஏற்படும் வறட்சி, சருமவியாதி, இளநரை, முடி உதிர்வு, பொடுகு, வாதம், கைகால் விறைப்பு, மூட்டுவலி, முதுகுவலி, இடுப்பு வலி, சொறி, சிரங்கு, தொடை இடுக்குகளில் வரும் சிரங்கு என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

❖ இந்நோய்களுக்கு பல வழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா? இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள், மூலிகைப் பவுடர்கள் எம்மிடம் உண்டு.

### ஆயுள்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!

❖ எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வறட்சி, இருமல், மலச்சிக்கல், வெள்ளை படுதல், மாதவிடாய்கால அதிக உதிரப்போக்கு, பாலியல் பிரச்சினை, இழுப்பு, சிறுநீர்க் கோளாறு, வாதம் போன்ற பல வகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆசவங்கள், குவாதங்கள், சூரணங்கள், குளிகைகள், சிறப் வகைகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

❖ மற்றும் தரமான பஸ்பங்கள், செந்தூரங்கள், கோரோசனை மாத்திரைகள், கஸ்தூரி மாத்திரைகள், பாலசஞ்சீவி பேதிக் குளிகைகள் போன்றவற்றை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

### எதிர்காலத்தில் "பைபாஸ்" செய்வதை தற்போதே தவிருங்கள்!!!

❖ இருதய நோய்கள் (பைபாஸ் செய்யாது குணமாவதற்கும்), உயர் இரத்த அழுத்தத்தைத் தடுத்து இரத்தத்திலுள்ள கொழுப்பைக் கரைத்து இரத்த நாளங்களை சுத்தப்படுத்துவதற்கும், புற்றுநோய் பரவுவதைத் தடுப்பதற்கும், சிறுநீர்ப்பையில் கல் போன்ற பலவகை நோய்களைக் குணமாக்குவதற்கும் உரிய மருந்து எம்மிடம் உண்டு (இம் மருந்து அமெரிக்கா உணவு மற்றும் ஒளஷத அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டது)

நீங்கள் நாடவேண்டிய இடம்:

**சிவா நறுமணப் பூங்கா**

இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சத்திர சந்திக்கு அருகில்)

தொலைபேசி:- 021 222 2567

(சி-7952)


# மரண அறிவித்தல்



## திருமதி நாகம்மா செல்லப்பா

மீசாலை கிழக்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா செல்லப்பா கடந்த 04/07/2014 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் ஆறுமுகம் செல்லப்பா (புகையிலை வியாபாரி சின்னத்தம்பி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை, சங்கரப்பிள்ளை, தங்கம்மா (முன்னை நாள் நெசவு ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி கமலாம்பிகை வைரவநாதன், பத்மநாதன் (இரத்தினம்) குமாரசாமி (சந்திரன்), திருமதி திலகவதி சண்முகரத்தினம் (யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), திருமதி இராஜேஸ்வரி பத்மநாதன் (யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை), திருமதி சிவனேஸ்வரி நேசராசா (விபுலானந்தாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் வைரவநாதன், பத்மராணி, காலஞ்சென்ற சண்முகரத்தினம் மற்றும் இராஜேஸ்வரி, பத்மநாதன் (மெக்கானிக் வெள்ளை), நேசராசா ஆகியோரின் மாமியாரும் நந்தசீலன் (பிரான்ஸ்), மஞ்சுளா, மாலா (சுவிஸ்), செந்தூரன் (பிரான்ஸ்), சுபைதா, மயூரா, குஜிந்தா, கஜீதன், தர்மிகா, சஞ்சீவ், பிரதீவ், சுபராவ், ரதீவ், லக்ஷன், காலஞ் சென்றவர்களான சசி, கிருஷாந் (விஜி) மற்றும் தமிழேந்தி (யா/பல்கலைக்கழகம், மருத்துவபீடம் 1 ம் வருடம்), யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களான ஸாம்பவி, மதுஷிகா, லதுஷன் மற்றும் பிரியங்கா, அர்ச்சவி, அபிகேசன் ஆகியோரின் பேர்த்தியும் றமீனா, ஹரிஸ், பரணிகா, துளசிகன், தரணிகன், அட்சயா, அட்ஷயன்,துஷானிகா, யசோபனா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 04/07/2014 வெள்ளிக்கிழமை மீசாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப.3.30 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மீசாலை கிழக்கு,**
**மீசாலை.**

(7074)

**தகவல்**
**குடும்பத்தினர்**

# இன்றைய இராசி பலன்

22.07.2014

(ஆடி 06,செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

ஏகாதசி முன்னிரவு 11.45 மணிவரை

கார்த்திகை முற்பகல் 9.44 மணிவரை

இராகுகாலம் 3.01- 4.31மணிவரை

சுபநேரம் 10.31 -12.01 மணிவரை

ஏகாதசி விரதம்,முதலாம் ஆடிச்செவ்வாய், சித்தாமிர்தம் **வளவன்**

**மேடம்:** காலைப்பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த வேலைகளில் கூட வெற்றி கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்:** பெருமைகள் வந்து சேர பெருமாளை வழிபடவேண்டிய நாள், உடல் நலம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்:** எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், மாலை நேரம் மகிழ்ச்சி தரும் பயணமொன்று உருவாகலாம்.

**கடகம்:** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள்.

**சிம்மம்:** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர்.

**துலாம்:** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், மறதியால் ஒரு சில பணிகளை செய்யாமல் விட்டு விடுவீர்கள், கூட்டாளிகளிடம் விழிப்புணர்ச்சி தேவை, செலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, இனிய பயணங்கள் நன்மை தரும்.

**தனுசு:** கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ்மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், சுவாரஸ்யமான நாள், உடல் நலம் சீராகும்.

**மகரம்:** எதிர்கால முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** பெற்றோரின் தேவைகளை நிறைவேற்றுவதில் பிரியம் காட்டுவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மீனம்:** முத்தான வாய்ப்புகள் இல்லம் வந்து சேரலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநெறிப் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சைவமகாசபை, சைவநெறிக்கூடம் என்பன இணைந்து வழங்கும் சிவநெறிப் புரவலர் (சைவப்பிரசாரகர்) பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.தசாதாரணதரத்தில் தமிழ் சைவ சமயம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் சைவ ஒழுக்கத்தில் நிற்பவர்களும் மனிதநேயம், ஜீவாகாருண்யத்தைக் கடைப் பிடிப் போரும் இதற்கு வீண்ணப்பிக்க முடியும்.


இதில் பங்குபற்று பவர்களுக்கு மதிய போசனம் இலவசமாக வழங்கப்படுவதுடன் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இலவச தங்குமிடவசதியும் வழங்கப்படும்.

ஆலயங்களில் பிரசாரம் மேற்கொள்ளவும் இல்லங்களில் வாழ்வியல் சடங்குகளை மேற்கொள்ளவும் வேலைவாய்ப்பு உறுதிசெய்யப்படும். இந்தியாவில் மேற்படிபபைத் தொடரவும் ஒழுங்கு செய்யப்படும்.

விசேடதிறனுடையவர்கள் புலம்பெயர் நாடுகளில் பணியாற்றும் வாய்ப்பும் உள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் சைவ மகாசபை, கல்லூரிவீதி, கொக்குவில் யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

மேலதிக விடயங்களை சைவமகா சபையின் இணைப்பாளரின் 077-8445 805, 021-3203284 ஆகியதொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளமுடியும். (6-23)




நன்றி-மிரர்

# இனவாதம் பின்பற்றப்படுவதானது நல்லிணக்கத்துக்கு நல்லதல்ல

## மாகாணசபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

விளையாட்டு நிகழ்வில் கூட இனவாதம் பின்பற்றப்படுவதானது இனநல்லிணக்கத்துக்கு நல்லதல்ல என மானிப்பாய் விளையாட்டு நிகழ்வில் வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.

விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்படுவதன் நோக்கமே சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுப்பு, நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்த வேண்டும் எனும் அடிப்படையில் தான்.

ஆனால் தாங்கள் போட்டியில் தோற்றுவிட்டோம் என்பதால், நாட்டின் ஜனாதிபதியின் சொந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த அணியினர், அதைக் கூறியே இனவாதத்துடன் தமிழ்த்தரப்பு யாழ்ப்பாண அணியினரை தாக்கியுள்ளதுடன், மோசமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.சுதுமலை தெற்கு அம்பாள் சன சமூக நிலையத்தின் 45 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு அம்பாள் விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்ட மாபெரும் மென்பந்து சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு விழாவும், ஆண்டுவிழாவும் கழகத்தின் தலைவர் நா.கிரிசாந் தலைமையில் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணியளவில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேறகண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும், தெரிவிக்கையில,

கடந்த சனிக்கிழமை கம்பஹாவில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மாவட்ட இளைஞர் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட அணியுடன் இடம்பெற்ற போட்டியில் அம்பாந்தோட்டை அணி தோற்றுவிட்டது.

தமது அபிமான அணி தோற்றுப போகின்ற போது ஆதரவாளர்கள் அதிருப்தி கொள்வார்கள், அதிர்ச்சி அடைவார்கள். ஆனால் ஆத்திரப்பட்டு வெற்றி பெற்றவர்களை தாக்குகின்ற அளவிற்கு, அதுவும் இனவாதமாகப் பேசியபடி தாக்குகின்ற அளவிற்கு துணிந்திருக்கிறார்களென்றால் இதை ஒரு விளையாட்டு சம்பவமாக எம்மால் பார்க்க முடியவில்லை.

தங்களுடையமண்ணில்விளையாட்டாகக்கூட தாங்கள்தமிழர்களிடம்தோற்றுப போவதைஜீரணிக்கமுடியாதநிலைமையில் தான் இப்படி நடந்திருக்கிறார்களென எண்ணத்தோன்றுகின்றது.

இது எவ்வகையிலும் ஏற்றுகொள்ள முடியாததுடன், விளையாட்டு விதிகளை அப்பட்டமாக மீறும் ஒரு செயற்பாடானதுடன், விளையாட்டு விழுமியங்களை கொச்சைப்படுத்துகின்ற ஒரு செயற்பாடாகவும் நாம் கருதுவதுடன் இச்சம்பவத்துக்கு எனது வன்மையான கண்டனங்களையும் தெரிவித்து கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (6)

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்தில் வெற்றிடமாகியுள்ள யா/புலோலி அ.த.க.பாடசாலைக்கு அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் அறிவித்துள்ளார்.

மேலும் ஏனைய விண்ணப்பதாரி பின்வரும் தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கை அதிபர் சேவையில் தரம் III இற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-1 இற்கு மேற்பட்ட தரமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

இலங்கை அதிபர் சேவையிலுள்ள அதிபர் கடமையாற்றாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். (இவர்களுக்கு பிரிவு 4 பொருத்தமாகாது)

வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி த்றபோது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்ற கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களது பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் மாத்திரம் ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் என அவர் மேலும்தெரிவித்துள்ளார். (6)




# ஏழு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்


(யாழ்ப்பாணம்)

யாழ். கைதடி மக்கள் நலன்புரி நட்புறவுக் கழகத்தின் டென்மார்க் ஒன்றியத்தினால், கைதடிப் பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள 7 மாணவர்களுக்கு சைக்கிள்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

கைதடி மக்கள் நலன்புரி நட்புறவுக் கழகத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் இவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இதற்கான மாணவர்கள் கைதடியிலுள்ள 7 சனசமூக நிலையங்களிலிருந்தும் தலா ஒருவர் படி தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்போது, கைதடியைச் சேர்ந்த 5 புற்றுநோயாளர்களுக்கு மாதாந்தம் உதவித் தொகை வழங்குவதற்கான திட்டமும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. (6)



காரைநகர் ஊரி கிராமத்துக்கு பவுசர்கள் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் வடமாகாண விவசாய, கமநல சேவைகள் கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டபோது...

## பெற்றுக்கொள்ளுங்கள்

(கரணவாய்)

வடமாகாண சமூகசேவைத்திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள இலவச மூக்குக் கண்ணாடி மற்றும் செவிப்புலனற்றவர்களுக்கான கருவி என்பவற்றை உரிய பயனாளிகள் பெற்றுக்கொள்ளுமாறு கரவெட்டி பிரதேசசெயலர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.

இதற்கமைய தி.இராசம்மா (சமரபாகு), க.ஜெயராணி (கும்பர் மலை) ஆகியோருக்கான இலவச் மூக்குக் கண்ணாடியும் ஜீ.சீவரட்ணம் (உடுப்பிட்டி) இற்கு செவிப்புலனற்றவர்களுக்கான கருவியும் வழங்கப்படவுள்ளது.

எனவே இவர்கள் கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்புகொண்டு தமது கருவிகளை பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-60)

# நால்வர் விபத்தில் படுகாயமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற வெவ்வேறு விபத்துக்களில் படுகாயமடைந்த 4 பேர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுன்னாகம், மயிலணிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் குறுக்காக மோட்டார் சைக்கிளை செலுத்த முற்பட்டபோது, சைக்கிளில் சென்று கொண்டிருந்த மல்லாகம் மகா வித்தியாலய ஆசிரியையான எஸ்.தர்சினி (வயது 38) நிலை தடுமாறி விழுந்து படுகாயமடைந்ததாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தை தொடர்ந்து, மேற்படி மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் கைதுசெய்யப்பட்டார். இதன் போது, இருவர் தப்பியோடியதாகவும் பொலிஸார் கூறினர்.

மேற்படி மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள், ஆசிரியையின் கழுத்திலிருந்த தங்கநகைகளை அபகரிக்கும் நோக்கில், குறுக்காக மோட்டார் சைக்கிளை செலுத்தியுள்ளனரா என்பது தொடர்பில் விசாரணையை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இது இவ்வாறிருக்க, குப்பிளான் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த ஊரெழு வடக்கைச் சேர்ந்த மாதன் சிவசம்பு (வயது 60) என்பவர் நிலை தடுமாறி விழுந்ததால் படுகாயமடைந்தார்.

சுன்னாகம் பகுதியில் மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் நேருக்குநேர் மோதியதால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த கோண்டாவிலைச் சேர்ந்த மகாலிங்கம் ஜெயந்திரன் (வயது 55) என்பவர் படுகாயமடைந்ததாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

மல்லாகம் நீதிமன்றத்துக்கு முன் வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த அளவெட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பூபாலசிங்கம் (வயது 67) என்பவர் நாய் குறுக்காக சென்றதால் நிலை தடுமாறி விழுந்து படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகார அரசாங்கத்தை விழுத்துவதற்கான முன்னெடுப்புக்களை தமிழர் செய்ய வேண்டும்

## மாவை எம்.பி.உரை

(கொழும்பு)

"தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடன் இணைந்து இந்த சர்வாதிகார அரசை விழுத்துவதற்கான முன்னெடுப்புக்களை நாம் செய்ய வேண்டும். அதேபோன்று தமிழ் மக்கள் தங்களை தாங்களே ஆளுகின்ற அரசியல் தீர்வைப் பெற நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதே வேளை, ஐ.நா. குழுவின் விசாரணைக்காக ஆவணங்களை நாங்கள் மிக வேகமாக சேகரிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 34 ஆவது சிறப்பு மாநாடு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனத்தின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடின. அதேவேளை, இந்த இயக்கங்களைச் சேர்ந்த எத்தனையோ ஆயிரம் பேர் தங்க ளுக் குள்ளே போராடி மடிந்து போனார்கள் என்பது மிகவும் துயரமான செய்தி.

முள்ளிவாய்க்காலுடன் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைத் தீர்ம் வென்று விட்டோம் என்று இந்த அரசு மார்தட்டிக் கொள்கின்றது.

எங்களுடைய தமிழ் சமூகத் தைப் பார்த்து தோற்றுப்போன சமூகம் என்று இந்த அரசு சொல்கின்றது. எமது இனத்தின் விடுதலைப் போராட்டத்தில் தங்களுடை ய உயிர்களைத் தியாகம் செய்த அத்தனை போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் எங்களுடைய மரியாதையையும் அனுதாபத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

எங்களுடைய உறவுகள் இன்று ஜனநாயக வழியில் எங்களுடைய மண்ணின் விடுதலைக்காக மீண்டும் எழுந்து போராடுகின்றார்கள் என்பதை கடந்த 5 ஆண்டுகளில் மீண்டும் நிரூபித்துக் காட்டியிருக்கி ன்றோம். முட்கம்பி வேலிக்குப் பின்னால் நின்றிருந்தும் எமது மக்கள் அரசுக்கு எதிராகப் போராடினார்கள்.

மேலும் ஜனாதிபதித் தேர்தலி லும் மக்கள் ஜனாதிபதிக்கு எதிராக வாக்களித்தார்கள். அதனைவிட மாகாண சபைத் தேர்தலிலும், அரசுக்கு எதிராகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாகவும் எமது மக்கள் வாக்களித்தனர்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் இராணுவத்தினர், புலனாய்வாளர்களின் மிரட்டல்கள், தாக்குதல்கள் என்பவற்றுக்கும் மத்தியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வரலாறு காணாத வெற்றியடைய வைத்தார்கள் எமது தமிழ் மக்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (6)


**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:**
**021 321 0815,**
**021 567 1532**



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 39 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>தொ.இ: B/1611 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 4.5 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: MBBS / Dr. (Internship)<br>தொ.இ: G/2317 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 39.75 உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: IT Software Engineer (பிரான்ஸ் PR)<br>தொ.இ: B/1620 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 63 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / தையல்<br>தொ.இ: G/2318 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 12.75 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>தொ.இ: B/1622 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: 10.5 உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, Dip. in Social Science / எழுதுவினைஞர்<br>தொ.இ: G/2320 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 4<br>கி.பா: 30.75<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: HNDA / நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>தொ.இ: B/1623 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 51.5 சூரி செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L /கணனி இயக்குனர்<br>தொ.இ: G/2321 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )





**யாழ்ப்பாணம்- கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தானத்தின் இரதோற்சவம்-2014**

முன்னவனே கோட்டை முனியப்பா யாழ். நகரில்
மன்னும் பரனே மகாதேவா பொன்னும்
பதமும் கலையாவும் பாலிப்பாய் என்றன்
இதயம் தனிலே இருந்து

25 ஆம் நாள் திருவிழா 22.07.2014 செவ்வாய்க்கிழமை காலை சங்காபிஷேகத்துடன் மாலை 4 மணிக்கு இரத உற்சவம்
26 ஆம் நாள் திருவிழா 23.07.2014 புதன்கிழமை காலை தீர்த்த உற்சவம்
27 ஆம் நாள் திருவிழா 24.07.2014 வியாழக்கிழமை வைரவர் சாந்தி.

இரதோற்சவத்தை சிறப்புற வாழ்த்துவோர்:

**கிருபா லேணர்ஸ்**

Regd No. DS/ 589, Kiruba Learners, Govt. Approved A Grade Driving Training School
அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை
இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், தொ.பேசி. 021 222 4353, 021 492 3200, 077 722 5292

(சி-7951)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தனிநாட்டை புறம் தள்ளிய கூட்டமைப்பு அமோக வரவேற்பளிக்கிறது அரசதரப்பு

(கொழும்பு)

தனிநாட்டுக் கோரிக்கையினை புறம் தள்ளிவிட்டு ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டமை வரவேற்கப்படவேண்டிய விடயம் என்று சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அக்கட்சியுடன் நேரடிப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழரின் நிரந்தர அரசியல் தீர்வுக்கு சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைகள் இலங்கை அரசாங்கத்துடன் இடம்பெற வேண்டுமெனவும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் நம்பிக்கையில்லை என்றும் இது காலத்தை இழுத்தடிக்கும் செயல் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிவந்த நிலையில் அண்மையில் இலங்கை அரசாங்கத்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நேரடிப் பேச்சு வார்த்தைகளுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தது.

இந்நிலையில் தீர்வுப் பிரச்சினை குறித்து அரசாங்கத்துடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருப்பதாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பகிரங்கமாக அறிவித்திருந்தனர்.



யாழ்.வடமராட்சியினைச் சேர்ந்த 2005 ஆம் ஆண்டு உயர்தரம் தோற்றிய இளைஞர்கள் ஒன்றிணைந்து கடந்த சில வருடங்களாக தொடர்ந்து நடத்தும் இரத்ததான முகாமுக்கு அமைவாக நேற்று முன்தினம் அல்வாய் கிழக்கு பாரதியார் சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற இரத்ததான முகாமின் போது... (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

இதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் உயர் நீதிமன்றிலும் ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொள்வதாக கூறப்பட்டிருந்தது.

இதற்கு இலங்கை அரசாங்கம் அமோக வரவேற்பளிப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேற்படி தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டமை வரவேற்கப்பட வேண்டியது என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஈழம் அல்லது பிரிவினைவாத கோரிக்கையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நிராகரித்துள்ளமை வரவேற்கப்படவேண்டியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிளவுபடாத ஐக்கிய இலங்கை என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாக அண்மையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சத்தியக் கடதாசி மூலம் நீதிமன்றில் அறிவித்திருந்தது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்துவது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே தீர்மானிக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# குடிநீர்ப் பிரச்சினை வாள்வெட்டு வரை

குடிநீர் விநியோகப் பிரச்சினையினால் ஏற்பட்ட முறுகல் நிலை முற்றி மோதலாக மாறியதையடுத்து சகோதரர்கள் இருவர் வாள் வெட்டுக்கிலக்காகி ஆபத்தான நிலையில் பதுளை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பதுளைப் பாலாவத்தை பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய பாலாவத்தையைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வாளொன்றையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 400 | 400 |
| தக்காளி | 180 | 150 | 200 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 60 |
| கோவா | 140 | 100 | 130 | 140 |
| கரட் | 200 | 150 | 180 | 200 |
| பூசணி | 40 | 50 | 50 | 60 |
| புடோல் | 60 | 60 | 60 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 60-120 | 70 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 150 | 150 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 90 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 60 | 100 |
| பயற்றங்காய் | 60 | 100 | 100 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 | 100 |
| பீற்றூட் | 100 | 100 | 120 | 120 |
| கறிமிளகாய் | 200 | 140 | 150 | 200 |
| முருங்கைக்காய் | 30 | 50 | 70 | 60 |
| போஞ்சி | 120 | 140 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 40 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 30 | 30 | 40 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 80 | 100 | 120 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like (42)


Search for people, places and things · Nagendram · Home

அஜந் குலசிங்கம்




எங்கே பார்த்தாலும் காதலர்கள். என்னைத் தான் காதல் செய்ய யாரும் இல்லை என்று வீடு திரும்பினேன்..., காத்திருந்தாள் எனக்காக சாப்பிடாமல் என் அம்மா...!

சக்தி வேல்



மாணிக்கம் அநோஸ்

ஷப்பா! மல்லாக்க படுத்து விட்டத்த பார்க்குறதுல என்னா சுகம்



அதுவும் கால விரிச்சு தூங்குறதுல என்னா காத்தோட்டம்!

துவா துவாகரன்

மனைவியின் தொலைபேசி இலக்கத்தை கணவன் Save செய்யும் விதம்




கோபி பிரஜீவ்

ஒவ்வொரு Friend உம் தேவ மச்சான்



புகழ்ராஜ் புகழ்

இரண்டு இடத்தில் பேசாதே
ஒன்று அறிவாளிகளுக்கு மத்தியில்
இரண்டு முட்டாள்களுக்கு மத்தியில்
இரண்டுபேருமே உன் கருத்தை
ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுக்காக விடைதேடும் வினாக்கள்

மஹிந்தவை எதிர்க்கும் தரப்பினருக்கு நேர்மையாக சிந்திக்க முடியுமா? எனும் தலைப்பில் சண்டே லீடரில் டாக்டர் தயான் ஜயதிலக எழுதிய கட்டுரை வெளியானது. அதன் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகின்றது.
-தமிழில் யோகர்-

அரச எதிர்ப்பாளர்கள், அதிருப்தியாளர்கள் போன்றோருடன் அரசியல்வாதிகள் மற்றும் சிவில் சமூகத் தினருமான அரச விரோத சக்திகள் மாற்று ஆட்சியொன்றை வழங்க முடியாதவர்களாக இருக்கும் அதேநேரம் அதனுடன் போட்டி போட இயலாதவர்களாயுமிருப்பதற்கான ஒரே அடிப்படைக் காரணம் அவர்களால் நேர்மையாக சிந்திக்க முடியாமலிருப்பதேயாகும். அதே நேரம் அரசும் இவ்விதமானதொரு நிலையிலேயே இருப்பதான ஒரு வாதக்கருத்தையும் முன்வைக்க இயலும்.

சிங்களப்பெரும்பான்மையினர் வாழும் பிரதேசப் பகுதிகளான தேர்தல் வாக்கு வலிமை மிக்க இதயப் பகுதிகளில் அரசைப் பொறுத்த மட்டில் அதற்கு எதிரான நிலைமை எவ்வளவோ குறைவாக இருந்தாலும் பெரிய பிரச்சினைகளில் அதாவது ஒன்றுடனொன்று உள்ளூர சம்பந்தப்பட்ட வெளிவிவகார மற்றும் இன விவகாரப் பிரச் சினைகள் காலங்கடந்த இழுபறி நிலையிலேயே தொடர்ந்துமிருந்து வரு கின்றன. ஓர் அரசு என்ற வகையில் அத ற்கு உண்டான தலை மைத்துவப் பொறுப்பு டைமைகள் காரணமாக அதன் சிந்தனைகள் பல வழிகளிலும் சிதறி அதன் தீவிரம் மட்டுப் படுமென்ற போதிலும் தீவிர எதிர்ப்புக்க ளுடன் கூடிய எதிர்ப்பா ளர்கள் மட்டில் இவ் வித பலவீனங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்காது.

அரசியல் ரீதியாகச் சொல்லப் போனால் நேர்மையாகச் சிந்திக்க முடியாமை என்பது பிரச்சினைகளை நேரடியாக அணுக முடியாமையே ஆகும்.

அரச எதிர்ப்பு சக்திகள் மற்றும் அதிருப்தியாளர்கள் தரப்பில் இவ்விதம் சிந்திக்க முடியவில்லை என்பது அரச தரப்பு கருத்துக்கள் மற்றும் வாதங்களை வெற்றி கொள்ள முடியாததேயாகும். அதாவது குடிமக்களில் பெரும்பகுதியினரை தமக்குச் சார்பாக மாற்றவோ அல்லது தமது கருத்துக்களுக்கு அவர்களைச் சம்மதிக்க வைக்க முடிவதில்லை.

அதாவது தேர்தல் தொகுதி மக்களை வெற்றி கொள்ள முடியாமை என்றாகிறது.

எளிமையாகச் சொல்வதானால் அரச எதிர்த் தரப்பினர்களது அரசியல் பார்வையும் அணுகு முறையும் அநேகமக்களது அதாவது சாதாரண பாமர மக்கள் மத்தியில் சரியான முறையில் சென்றடையவில்லை. இந்நிலை தொடர்ந்தும் நிலவமுடியாது.

எனவே அரசியல் எதிரணியினர் மற்றும் அதிருப்தியாளர் அல்லது நெருக்கடிக்குள் தள்ளும் விதத்தில் கருத்துக்கூறும் பகுத்தறிவாளர்கள் போன்றோரது கூடுதல் மோசமான சிந்தனைத் தவறுகளை நாம் இங்கு ஆராய்வதன்மூலம் அத்தவறுகளை திருத்திக் கொள்வதற்கான மிக முக்கியமான கருத்துக்களை நாமும் முன்வைக்க முடியும்.

இலங்கைத் தேசியத்தின் இதயத்தில் பாரிய பிரச்சினையாக கதைத் துக் கொண்டிருக்கும் தமிழர்களது விடயம் தொடர்பான சிந்தனை களில் விடப்படும் மிக வும் மோசமான தவறு கள் தொடர்ந்தும் இடம் பெறுவதாகவே இருக்கிறது.


இரு வாதங்கள் முன்வைக்கப்படலாம். ஒன்று போரின் போது வெளிநாடுகளின் ஆதரவைப்




பெறும் நோக்காக, இரண்டாவதாக அதற்குப் பின்னர் வெளிநாட்டு நெருக்குதல்கள் காரணமாக என்பது போன்ற விவாதங்களே அவை. ஆனாலும் இதுவே மஹிந்த பற்றிய விமர்சனத்தை தகர்த்து விடுவதாயுமிருக்கும்.

தனிமாவட்டம் என்ற இருக்கவே செய்தது. 13ஆவது திருத்தத்தில் வெட்டிக்குறைப்புகள் மேற்கொள்வதற்கான முயற்சிகள் ஆரம்பிக் கும் தருணங்களிலேயே அந்த அழுத்தங்களும் தொடர்ந்து கொண்டிருந்தது.

இவ்விதமாக வெளி விவகாரங்கள் மட்டில் ஒருவித புரிதலை கொண்டிருப்பவர் என்பதால் ராஜபக்ஷ அதிகாரப் பகிர்வு விடயத்தில் அடிப்



அதிகாரப்பர வலாக்கத்திற்கு எதிரான கொள்கைப் பிடிவாதம் உள்ளவரே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்பதுடன் அவரது அரசியல் வாழ்க்கை முழுவதும் அவர் அப்படியான ஓர் அடிப்படைவாதியாகவே இருக்கின்றார் என்ற ஒரு கருத்து இருந்து வருகிறது.

ஆனாலும் இது மஹிந்த ராஜபக்ஷ பற்றிய இரண்டு பெரிய உண்மைகளை புறக்கணிக்கும் விதத்திலான கருத்தாகவே இருக்கும். ஏனென்றால் வேறு எந்தவொரு தலைமைத்துவத்தின் கீழும் இடம்பெறாத விதத்தில் மஹிந்தவின் ஜனாதிபதித் தலைமைத்துவத்தின் கீழேயே கிழக்கு மற்றும் வடக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் மிகவும் சரியான விதத்திலும் மதிநுட்பமான முறையிலும் நடத்தி முடிக்கப்பட்டதாயிருந்தது. இருப்பினும் இதற்கு மாறாக ரீதியில் வெளிநாட்டு நெருக்குதல்களுக்கான ஆதாரங்களில்லாமலேயே கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டதன் அடிப்படையில் அந்த மாகாண சபைக்கான தேர்தலை சுதந்திரமான முறையில் நடத்தும் பொருட்டு தேர்தலுக்கான தேர்தலை சுதந்திரமான முறையில் நடத்தும் பொருட்டு தேர்தலுக்கான பிரகடனத்தை ராஜபக்ஷ வெளியிடத் துணிந்தார். போரின் போது இயங்கி வந்த மாகாண சபைகளுக்கு, தான் ஏற்கனவே நிர்ணயித்திருந்த மாவட்ட மட்ட அதிகாரப்பகிர்வு அலகின் அடிப்படையிலேயே கிழக்கிற்கும் வழங்குவதென்ற நோக்கத்துடன் இந்திய உடன்படிக்கையை புறக்கணித்துச் செயற்பட அவர் தீர்மானித்திருந்தார்.

ஆனாலும் வடமாகாண சபை தேர்தல் விடயத் [illegible]

படைவாதியாக இருப்பதிலும் பார்க்க பழைமை பேணும் ஒரு யதார்த்த வாதியாகவே இருக்கிறார் எனலாம். ராஜபக்ஷவின் அரசியல் எதிர்பார்ப்பில் அவருக்கு முந்திய எந்தத் தலைவர்களாலும் கால் நூற்றாண்டு காலமாக அரசியல் ரீதியில் அடைய முடியாதிருந்த உண்மையான ஒரு வெற்றியை அவர் ஒருவரே சாதித்திருந்தார் என்பதை ஏற்றுக்கொள்ளத்தவறிய அவரது எதிராளிகளே தமது கண்மூடித்தன மான குற்றச்சாட்டுகளால் தம்மைத் தாமே அடிப்படையவாதிகளாக அடையாளப்படுத்திக் கொண்டுள்ளனர். ஏனெனில் சரியான விதத்தில் [illegible] முறையில் [illegible]ப்புலிகளை

தோற்கடித்ததன்மூலம் ஜனநாயக ரீதியில் ஏற்கனவே ஏற்பட்டிருந்த அரசியல் இடைவெளியை நிரப்பும் விதத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தி ஜனநாயகத்தை நிலை நாட்டக்கூடியதாயிருந்தது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடனான அரசியல் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றமில்லாதிருந்ததற்கான பொறுப்பு அரசாங்கத்தையே சார்ந்தது என்ற கருத்தானது மிகவும் சரியானதே. இருந்தும் இந்தக் கருத்தினை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்குச் சில முன் நிபந்தனைகள் இருப்பதைக் காணலாம். எனவே அதற்கான முற்று முழுதான பொறுப்பும் அரசையே சாரும் என்று கூறிவிடமுடியாது.

த.தே.கூட்டமைப்புக்கும் அரச தரப்பினருக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் உண்மையான அரசியல் வெளிப்படைத்தன்மை முற்றிலும் இல்லாதிருந்தமையே மேற்படி கூற்றுக்கான விளக்கமுமாகும். மாறாக அவ்விதம் இருந்திருக்குமானால் பிரச்சினைகளை உண்மையில் விளங்கிக் கொள்ள மறுப்பது போன்ற குறைகளுக்கும் குற்றச்சாட்டுக்களுக்குமான தனது தரப்பு ஒளிவு மறைவுகளை அரசு முழுமையாகவே வெளிக்காட்டியிருக்கும்.

ஐ.தே.கவுக்கும் த.தே. கூட்டமைப்புக்குமிடையில் அல்லது ஜே.வி.பிக்கும் த.தே.கூட்டமைப் புக்குமிடையிலோ ஏன் பேச்சுவார்த்தைகள் எது வும் இடம்பெறவில்லை? தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருங்கிணைவு போன்றவற்றின்மூலம் பிரச்சினைக்கான தீர்வொன்றை வெளிப்படுத்தும் விதத்தில் ஒரு வட்டமேசைப் பேச்சுவார்த்தையுங்கூட ஏன் மேற் கொள்ளப்படவில்லை?

பிரச்சினைகள் மட்டில் இணைந்த விதமான அறிக்கை அல்லது வாக்கு மூலம் வழங்கும் விதத்தி லான இருதரப்பு பேச்சு வார்த்தைகளாவது மேற் கொள்ளப்படாதது ஏன்?

இவ்விதமான ஒரு பேச்சுவார்த்தை எதிர்த்த ரப்பை அரசாங்கத்தின் பிரசாரத்திற்கான இலக் காக்கிவிடும் என்பதே இதற்கான காரணமா யிருக்குமானால் அதனை ஏன் பொருட்படுத்தவேண்டும்? என்ற கேள்வி எழும். இவ்விதமான ஒரு குற்றச்சாட்டு பயனுள்ளதாகிவிடுமென்பதே அதற்கான காரணமாகுமென்றால் அது எதனால்?த.தே.கூவின் அல்லது எதிர்த் தரப்புகளின் தலைமைத்துவப் பண்பில் இருக்கக் கூடிய ஏதாவது பிழை தான் அவர்களை இந்த விதமான குற்றச்சாட் டுக்களுக்கு இலக்காக் குகிறதா?

இடது- வலது சாரி எதிர்க்கட்சிகளுடன் மேற்கொள்ளக்கூடிய வெளிப்படையான உரையாடலொன்று வடக்குக் கிழ க்குப் பகுதிகளில் த.தே. கூட்டமைப்புக்கு களங்கம் ஏற்படுத்தி விடக்கூடுமோ? அப்படியானால் தமிழ்மக்கள் மத்தியில் அவர்கள் பற்றிய பொதுக்கருத்து படுமோச மானதாயிருக்குமென்று நாம் தீர்மானிப்பதா?

அப்படி இல்லையென்றால் தனது அரசியல் கோரிக்கைகளின் நியாயத்தையும் சட்டபூர்வ அங்கீகாரத்திற்கான உரிமையையும் எதிர்த்தரப்பைச்சேர்ந்த கட்சிகளுக்கு உறுதியான முறையில் நியாயப்படுத்துவதென்பது முடியாத காரியம் என்ற த.தே.கூட்டமைப்பின் சந்தேகமே அதற்கான காரணமாயிருக்குமோ?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அழகில் மயங்கிய ராணி!

தக்காண ராஜ்யத்தை சிவ பாலன் என்னும் அரசன் ஆட்சி செய்து வந்தான். மாளவ நாட்டு மன்னனின் மகள் கல்யாணி சிவபாலனின் ராணியாக விளங்கினாள்.

ஆங்காங்கே உள்ள பகை அரசர் கள் பலர் ஒன்று திரண்டு சிவபாலனின் தக்காணத்தைப் பிடித்துவிட்டனர்.

சிவபாலன் தன் ராணி கல்யாணி யுடன் மாமனாரின் நாட்டுக்கு புறப்பட்டான்.

போகும் வழியில் காட்டின் ஒரு பகுதியிலிருந்து சிங்கமும் யானையும் அவனை எதிர்த்து வந்தன. அந்த இரண்டு விலங்குகளையும் கடுமை யாகப் போராடிக் கொன்றான் அரசன்.

அவன் மனைவி கல்யாணி, உயிரைப் பொருட்படுத் தாமல் இர ண்டு பெரிய மிருக ங்களையும் வீரத்தோடு தாக்கிக் கொன்றீர்களே! ஆகா! எத்தகைய வீரம்! என்று வானளாவப் புகழ்ந்தாள்.

புகழ்ச்சியை புன்னகையோடு கேட்டுவிட்டு ராணியே! சத்திரியனு க்கு இது சாதாரண நிகழ்ச்சிதான். பெரிது அல்ல! இந்த வீரத்தைப் பற்றி உன் தந்தையிடம் புகழ்ந்து பெரிதாகப் பேசாதே! என்று அடக்கத்தோடு சொன்னான் அரசன் சிவபாலன்.

நாட்டை இழந்த அரசன் மனைவி யுடன் மாமனார் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

சிலநாட்களுக்கு பிறகு மாளவ நாட்டு மன்னனான மாமனாரிடம் ஏராளமான குதிரைகளையும் போர் வீரர்களையும் செல்வத்தையும் பெற்று அருகில் உள்ள கடங்க அரச னின் பக்க பலத்தோடு தன்னுடைய பகைவனுடன் போர் புரிந்து இழந்த நாட்டைத் திரும்பக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுவிட்டான் சிவ பாலன்.

சிவபாலன் போருக்குச் சென்றிருந்த சமயம் ராணி கல்யாணி அரண்மனை உப்பரிகையில் நின்றுகொண்டிருந்தாள்.

அப்போது அழகான வாலிபன் ஒருவன் அந்த வழியாக போய்க் கொண்டிருந்தான். அவனைப் பார்த் ததும் அவனுடைய அழகில் ராணி யின் மனம் லயித்துவிட்டது.

உடனே தன் அந்தரங்கத் தோழியை அழைத்து அடியே! என் கணவர் பெரிய வீரர். தைரியசாலி என்றாலும் அந்த வாலிபனின் அழகு ஏனோ என்னை மதி மயங் கச் செய்கிறது. அவனை எப்படியாவது அந்தப் புரத்துக்கு ரகசியமாக அழைத்து வா என்றாள் ராணி கல்யாணி.

அவளுடைய விருப்பத்தை நிறை வேற்றும் பொருட்டு தோழி உடனே சென்று அந்த அழகுமிக்க வாலிபனை அழைத்துவந்து அந்தப்புரத்து அறை யில் நிறுத்தினாள்.

வந்த அழகன் சுற்றும் முற்றம் பார்த்து விழித்தான்.

தன் அருகில் இருந்த இருக்கையில் அவனை அமரச் சொன்னாள் ராணி கல்யாணி.

அந்த வாலிபன் அதற்கு முன் அரண்மனையைக் கண்டவன் அல்ல! ராணியும் பார்த்து அறியாதவன். ஆகையால் அவன் உடல் வெடவெட என்று நடுங்கியது. எனவே அவன் அழகானவன். எனினும், பயந்தாங் கொள்ளி, தொடை நடுங்கி என்பதை அறிந்துகொண்டாள் ராணி. அந்த சமயத்தில் சாளரத்தின் வழியாக பாம்பு ஒன்று வந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் அந்த வாலிபன் அலறிப் புடைத்துக் கொண்டு எப்படியோ அதை அடித்துக் கொன்று போட்டான்.



பாம்பு செத்துப் போனதும் அவனு டைய ஆனந்தத்துக் கும் அளவில்லை. பெரிய வீரனைப் போல்தான் செய்த தைச் சொல்லிப் பெருமையாகக் குதித் தான்.

அவனைக் கவனி த்த ராணி கல்யாணி க்குத் தன் கணவனு டைய வீரம் நினை வுக்கு வந்தது.

அந்த நேரத்தில் தோழி ஓடி வந்து நம் அரசர் பகைவ னுடன் போர் செய்து வெற்றி பெற்று இழந்த நாட்டை மீண்டும் கைப்பற்றி யதாகச் செய்தி வந் துள்ளது. அந்த மகி ழ்ச்சியைத் தெரிவி க்க தந்தை வந்து கொண்டிருக்கிறார் என்றார்.

உடனே கயிறு ஏணி வழியாக அந்தப் பயந்தாங் கொள்ளி அழகனைத் தப்பி ஓட வைத்தாள் ராணி. அவன் பயந்து கொண்டே ஏணி வழியாக இறங்கினாலும் கூட நல்லவேளை கீழே விழுந்து உயிரை விடாமல் சென்று விட்டானே என எண்ணிக் கொண்டாள் தோழி.

அதன்பின் தோழியிடம் கல்யாணி நாங்கள் வரும் போது பயங்கர சிங்கத் தையும் பெரிய யானையும் எதிர்த்துப் போரிட்டு கொன்று வீரத்தைக்கூட பெரிதுபடுத்தாமல் அடக்கமாக இருந்ததோடு என் தந்தையிடம் கூட அதை வெளிபடுத்த வேண்டாம் என்று சொன்னாரே அரசர்! அத்தகைய வீரத்தின் அடக்கமான பெருமை எங்கே! ஒரு பாம்பைக் கொன்று விட்டதற்காக அந்த அற்பன் நடத்திய ஆர்ப்பாட்டம்தான் என்ன?

அழகும் வீரமும் பொருந்திய அரசர் எங்கே? அழகு மட்டுமே உடைய இந்தக் கோழை எங்கே?

பாழும் பெண் மனமானது ஒரு நொடியில் எப்படி நிலை தடுமாறிப் போயிற்று பார்த்தாயா? என்று தன்னையே நொந்து கொண்டாள் ராணி.

பகைவனை வெற்றி கொண்டு மகிழ்ச்சியோடு திரும்பி வந்த சிவ பாலன் மாமனாருக்கு நன்றி கூறி வணக்கம் தெரிவித்து மனைவி கல்யாணியை தன் நாட்டுக்கு அழைத் துப்போய் சுகமாக வாழ்ந்தான்.

## 07.2014 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1499 - புனித உரோமப் பேரரசின் முதலாம் மாக்சிமிலிய னின் படைகளை சுவிஸ் படைகள் டொனார்க எனற இடத்தில் இடம்பெற்ற போரில் வென்றன.
- 1587 - வட கரோலினாவின் ரோனோக் தீவில் ஆங்கி லேயர்களின் இரண்டாவது தொகுதி குடியேற்ற வாதிகள் வந்திறங்கினர்.
- 1812 - வெல்லிங்டன் பிரபு தலைமையிலான பிரித் தானியப் படைகள் ஸ்பெயினில் சலமாங்கா என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1823 - யாழ்ப்பாணத்தில் டாக்டர் டானியல் வோரன் புவர் தலைமையில் அமெரிக்க மிஷனின் பட்டிக்கோட்டா செமினறி திறக்கப்பட்டது.
- 1933 - வைலி போஸ்ட் 15,596 மைல்களை 7 நாட் கள், 18 மணி, 45 நிமிடங்களில் உலகைக் கடந்து தனியே உலகைச் சுற்றி வந்த முதல் மனிதன் என்ற பெருமையைப் பெற்றார்.
- 1944 - போலந்தின் தேசிய விடுதலைக்கான குழு நாட்டில் சீர்திருத்தங்களையும், நாசிகளுக்கெதி ரான போரை முன்னெடுத்துச் செல்லவும், தொழிற்சாலைகளை தேசிய மயமாக்கும் திட்டத்தையும் அறிவித்தது. போலந்தில் கம யூனிச ஆட்சி ஆரம்பமானது.
- - 1962 - நாசாவின் மரைனர் 1 விண்கலம் ஏவப்பட்டு சில நிமிடங்களில் கட்டுக்கடங்காமல் சென்ற தால் அது அழிக்கப்பட்டது.
- 1999 - விண்டோஸ் லைவ் மெசன்ஜர் மைக்ரோசாப் டினால் வெளியிடப்பட்டது.
- 2003 - ஈராக்கில் சதாம் உசேனின் புதல்வர்கள் குவாசி, உதய் இருவரும் அமெரிக்க இராணுவத்தின ரால் கொல்லப்பட்டனர். இவர்களுடன் சதா மின் 14 வயதுப் பேரனும் கொல்லப்பட்டான்.
- 2009 - சூரிய கிரகணம், ஜூலை 22: 21ம் நூற்றாண் டின் மிக நீண்ட சூரிய கிரகணம் நிகழ்ந்தது. வட இந்தியா, நேபாளம், வங்காளதேசம் போன்ற இடங்களில் முழு கிரகணம் ஏற்பட்டது.

### பிறப்புகள்

- 1923 - முக்கேஷ், இந்தியப் பாடகர் (இ. 1976)
- 1983 - நுவன் குலசேகர, இலங்கைத் துடுப்பாட்ட வீரர்


### இறப்புகள்

- 1832 - இரண்டாம் நெப்போலியன், பிரான்சின் பேரர சன் (பி. 1811)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

# 16.07.2014-14.08.2014



## துலாம்

**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனைப்படி நடந்தால் அனைத்திலும் வெற்றி கிட்டும் என்று சொல்லும் துலாம் இராசி நேயர்களே!**

**ஆலய வழிபாடு ஆனந்தம் வழங்கும்!**

## ஆலய வழிபாடு ஆனந்தம் வழங்கும்!

ஆடிமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்திலேயே உங்கள் ராசியிலேயே செவ்வாயும், சனியும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். எனவே, எதையும் யோசித்துச் செய்வது நல்லது. குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில், கூட இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயத்தை அதிகம் பெறமுடியும். வாக்கு, தனம், குடும்பம் என்று சொல்லப்படும் இடத்திற்கு அதிபதியான செவ்வாய் பகைக் கிரகமான சனியோடு கூடி உங்கள் ராசியிலேயே சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல.

கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலுமா? என்பது சந்தேகம்தான். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் மேலோங்கலாம். இமையும், விழியும்போல் உங்களோடு இணைந்து செயற்பட்டவர்கள்கூட இப்பொழுது உங்களைவிட்டு விலக நேரிடலாம். இருந்தாலும் நீங்கள் கவலைப்பட வேண்டாம், செவ்வாய் உங்கள் ராசியிலிருந்து விலகும் வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

விழிப்புணர்ச்சி கூடுதலாக இருந்தால் விரயங்களிலிருந்து விடுபட இயலும். மறுப்புச் சொல்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இந்த நேரத்தில் மன மகிழ்ச்சியை வரவழைத்துக்கொள்ள அங்காரக வழிபாடும், சனி பகவான் வழிபாடும், அனுமன் வழிபாடும் முறையாக செய்வது நல்லது. அதுமட்டுமல்லாமல் 6 இல் கேது, 12இல் ராகு இருப்பதால் சர்ப்ப கிரகத்தின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது. எனவே சர்ப்ப சாந்திப் பரிகாரம் செய்துகொள்வதன் மூலம் தடைகளிலிருந்து விடுபட இயலும்.

ஜென்மச் சனியில் ஆரோக்கியத் தொல்லை ஏற்படலாம். எனவே, நோய்க்கான அறிகுறி தோன்றும் பொழுதே வைத்திய ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. அப்பொழுதுதான் ஆரோக்கியத் தொல்லையிலிருந்து விடுபட இயலும்.

**கடக புதனின் சஞ்சாரம்!**

ஜூலை 23ஆம் திகதி கடக ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 9, 12 இற்கு அதிபதியான புதன் 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். தற்போதுள்ள தொழிலை விட்டுவிட்டு வேறு தொழிலைச் செய்யலாமா என்ற சிந்தனை மேலோங்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உடன் இருப்பவர்களால் தொல்லை அதிகரிக்கலாம். எனவே, புதிய உத்தியோகத்தை நாடிச் செல்லும் நிலை உருவாகலாம். புதிய வாய்ப்புகளும், தகுதியான இடத்திலிருந்து அழைப்புகளும் உங்களுக்கு வந்து சேரும்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிநாதன் சுக்ரன் ஆகஸ்ட் 7ஆம் திகதி கடக ராசியில் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக எதிர்பாராத நல்ல திருப்பங்கள் உங்களுக்கு வந்து சேரலாம். குடும்பத்தில் நீண்ட நாளாக நடைபெறாதிருந்த சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். வங்கிகளில் கடனுதவி கேட்டு விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு நீண்ட நாட்களாக கடன் தொகை கிடைக்கவில்லையே என்ற கவலை இப்பொழுது அகலும். கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள்.

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**


சிம்ம ராசியில் ஆகஸ்ட் 8ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப் போகின்றார். விரயாதிபதி லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் விரயத்திற்கேற்ற, லாபம் வந்துகொண்டே இருக்கும். வீட்டுத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். ஆற்றல் மிக்கவர்கள் உங்கள் அருகிலிருந்து ஏற்ற விதத்தில் உதவி செய்வர்.

வீடு வாங்கும் முயற்சிகளில் அல்லது சொத்துக்கள் வாங்கும் முயற்சிகளில் இருந்த தடை அகலும். விலை உயர்ந்த பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக அமையவும், அவர்களின் முன்னேற்றம் கருதியும் கூடுதலாக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வரவைக் காட்டிலும் செலவு கூடும். பொறுமையைக் கடைப்பிடித்து வருவதன் மூலமே பொன்னான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இயலும். செவ்வாய், சனி சேர்க்கை உங்கள் ராசியிலேயே இருப்பதால் கோபத்தைக் குறைத்துக் கொண்டால்தான் குடும்பத்தில் நிம்மதி கிடைக்கும். தெய்வீகப் பிரார்த்தனைகளை உடனுக்குடன் நிறைவேற்றுவது நல்லது. விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் குடும் பத்தில் ஒற்றுமை பலப்படும். இடமாற்றம், ஊர்மாற்றம் போன்றவைகள் எதிர்பாராத விதத்தில் அமையலாம். அங்காரக வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

# சிவல்புரி சிங்காரம்



## விருச்சிகம்

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**நல்ல காரியம் செய்து பிறர் உள்ளத்தில் இடம்பெற நினைக்கும் விருச்சிக இராசி நேயர்களே!**

**வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும்!**

## வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும்!

ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசியில் பதிவாகிறது. ராகுவும் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். தொழிலில் எதிர்பார்த்த வருமானத்தைக் காட்டிலும் இருமடங்காக உயர வழிபிறக்கும். துணையாக இருப்பவர்கள் தோள்கொடுத்து உதவுவர்.

குடும்பத்தில் சுபகாரிய நிகழ்வுகள் நடைபெறுவதில் இருந்த தாமதங்கள் அகலும். குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நூதனப் பொருட் சேர்க்கை உண்டு. புகழ் மிக்கவர்களின் சந்திப்பு கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள். பொன், பொருள் வாங்குவதிலும், புதிய இடம் வாங்கி மனை கட்டுவதிலும் மனதைச் செலுத்துவீர்கள்.

விரயச் சனியின் ஆதிக்கம் இப்பொழுது நடைபெற்று வருகிறது. அதோடு ராசிநாதன் செவ்வாயும் இணைந்திருக்கிறார். எனவே, சுப விரயங்கள் அதிகரிக்கும். சுற்றத்தார்களுக்கும் உற்றார், உறவினர்களுக்கும் உதவி செய்து அவர்களின் வாழ்த்துக்களைப் பெறுவீர்கள். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு நல்ல மாற்றங்கள் வந்து சேரும்.

6இற்கு அதிபதி செவ்வாய் 12இல் சஞ்சரித்து விபரீத ராஜயோகத்தை உருவாக்குவதால் உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடத்திற்கு மாறுதல் கிடைக்கும். மேலதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். காலநேரம் பார்த்து காரியத்தைச் செய்தால் ஞாலம் போற்றும் வாழ்க்கை அமையும் என்பதை அறிந்து வைத்திருப்பவர்கள் நீங்கள். அந்த அடிப்படையில் உச்ச குரு உங்கள் ராசியைப் பார்க்கும் பொழுது உங்கள் சிந்தனைகளைச் செயலாக்கிப் பார்ப்பீர்கள். செயல் அனைத்திலும் வெற்றி கிடைக்க செவ்வாய் தோறும் வடக்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வாருங்கள். லாப குருவும், பஞ்சம கேதுவும் பண வரவை அதிகரிக்க வைக்க சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை மேற்கொள்ளுங்கள்.

**கடக புதனின் சஞ்சாரம்!**

ஜூலை 23 ஆம் திகதி கடக ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். லாபாதிபதி 9 இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பயணங்களால் பலன் கிடைக்கும். தூரதேசத்திலிருந்து வரும் தொலைபேசி வழித்தகவல் தொழிலுக்கு உறுதுணை புரிவதாக இருக்கும். [illegible] மாறும். தந்தை வழி உறவில் அன்னியோன்யம் அதிகரிக்கும். ஆதாயமும் கூடுதலாக கிடைக்கும். வாகனம் வைத்திருப்போர் பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். நீண்டநாள் பாக்கிகள் வசூலாகும்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 7ஆம் திகதி கடக ராசியில் சுக்ரன சஞ்சரிக்கப் போகிறார். கடகத்தில் குரு, புதன், சுக்ரன், சூரியன் ஆகிய 4 கிரகங்களும் ஒன்றாக இணைந்து சஞ்சரிக்கும் பொழுது, ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்திரவாதம் கிடைக்கும். வழிபாட்டின் மூலமே வளர்ச்சி வந்தது என்று சொல்லி மகிழ்வீர்கள். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

சிம்ம ராசியில் ஆகஸ்ட் 8ஆம் திகதியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். தொழில் ஸ்தானத்தில் லாபாதிபதி சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொகை வரவு திருப்திகரமாக இருக்கும். தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கும். கிளைத் தொழில்கள் தொடங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வாழ்க்கைத்துணை வழியே வரவு வந்து சேரும். அஞ்சல் வழியிலும் அனுகூலத் தகவல் உண்டு. [illegible] நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டு வந்து சேர்ப்பர். இம்மாதம் ஆனைமுகப் பெருமான் வழிபாடும், ஆறுமுகப்பெருமான் வழிபாடும், குலதெய்வ வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

ஆடி மாதத்தை கோடி நன்மை தரும் மாதமாக நீங்கள் கருதலாம். பண வரவு திருப்தி தரும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். வீடு கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குழந்தைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். வருங்கால நலன் கருதி முக்கியப் புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள். குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் கூடும். வாரிசுகளின் கனவுகளை நனவாக்குவீர்கள். செவ்வாய் தோறும் விரதமிருந்து அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## "சாதனை நாயகனின் சரித்திரம்"




...ஒருமாதம் கழித்து மூன்றாவது விக்கெட் ஜோடி சேர்ந்து சச்சின் மற்றும் காம்ப்ளி எடுத்த 664 ரன்கள் உலக சாதனையாக அங்கீகரிக்கப்பட்டது. உலக அளவில் பல நாடுகளில் பல இடங்களில் இதுபோன்று போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் அதுவரை சாதனையாக கருதப்பட்ட ஜோடி பால்டன் மற்றும் ரிப்பன் ஆகியோர். 1913-1914 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவில் விக்டோரியா மாநிலத்தில் நடைபெற்ற போட்டியில் எடுத்த ரன்கள் தான். இவர்களின் 75 வருட சாதனையை சச்சின் மற்றும் காம்ப்ளி ஜோடி தகர்த்து எறிந்ததுடன் தங்கள் பெயர் களையும் கின்னஸ் சாதனைப் புத்தகம் மற்றும் விஸ்டன் கிரிக்கெட் ஆல்மனாக் ஆகியவற்றிலும் பதித்தனர்.

ஹாரிஸ் கேடயம் இறுதிப் போட்டி மும்மை கிரிக்கெட் ரசிகர்களுக்கு முக்கியமானது. அன்ஜுமான் இஸ்லாம் அணியை எதிர்த்து சாரதாஷ்ரம் அணி மோதியது. காம்ப்ளி 18 ரன்களில் ஆட்டம் இழக்க சச்சின் தொடர்ந்து ஆடி முதல்நாள் இறுதியின்போது 122 ரன்களை எடுத்தான். அடுத்தநாள் ஆட்ட இறுதியின்போது சச்சின் எடுத்த ரன்கள் 286. மூன்றாம்நாள் ஆட்ட இறுதியில் அவன் எடுத்தது 346 ரன்கள். பின்னர் ஆடிய அன்ஜுமான் அணியும் அடுத்த இரு நாட்களும் தொடர்ந்து ஆட முதல் இன்னிங்ஸ் முடியாத நிலையில் இரு அணிகளும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டன.



இந்திய கிரிக்கெட் க்ளப்பின் (cricket clup of india) உறுப்பினராக சச்சினை ஆக்க வேண்டும் என்று அதன் தலைவர் ராஜ் சிங் துங்கர்பூர் விரும்பினார். காரணம் அந்த க்ளப்பின் சீனியர் டெஸ்ட் விளையாட்டு வீரர்கள் வலைப் பயிற்சி செய்வார்கள். அவர்களுடன் ஆடுவதன் மூலம் சச்சினுக்கு நல்ல அனுபவம் கிடைக்கும் என்பது அவர் எண்ணம். ஆனால், அந்தக் க்ளப்பில் உறுப்பினராக வேண்டுமானால் குறைந்த பட்சம் 18 வயது பூர்த்தியாகியிருக்க வேண்டும். ஆனால், சச்சினின் வயதோ அப்போது 14தான். இருப்பினும் சச்சினின் அபாரத் திறமை மற்றும் எதிர்காலத்தில் அவன் நாட்டிற்கு சேர்க்க இருக்கும் பெருமைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு க்ளப்பில் விதிகளைத் தளர்த்தி சச்சினை 14 வயதில் இந்தியக் கிரிக்கெட் க்ளப்பின் உறுப்பினர் ஆக்கினார் அவர். இது சச்சினுக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவம். காரணம் 14 வயதில் அந்தப் பாரம்பரியம் மிக்க கிரிக்கெட் க்ளப்பில் யாருமே அதுவரை உறுப்பினர் ஆனதில்லை.

### கவாஸ்கரின் ஆறுதல் கடிதமும் கின்னஸ் உலக சாதனையும்!



**கவாஸ்கரின் கடிதம் சோர்ந்து கிடந்த தனது உடலில் ஆயிரம் வால்ட் மின்சாரத்தைப் பாய்ச்சித் தனக்குப் புத்துணர்ச்சியை அளித்தது போன்று உணர்ந்தான் சச்சின். கணநேரத்தில் அனைத்தையும் மறந்துவிட்டு தனது கடமையைச் செய்யப் புறப்பட்டான் அவன்!**

(தொடரும்)

கே.ரமேஷ்

### பெண்களுக்கிடையில் மோதல்; ஐந்து பேர் வைத்தியசாலையில்

யாழ்.புன்னாலைக் கட்டுவன் மத்தாளோடையைச் சேர்ந்த இரு பெண்கள் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஐந்து பெண்கள் படுகாயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஞாயிற்றுக்கிழமை நேற்று மாலை அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

மகாலிங்கம் செல்வராணி (வயது 57), மகாலிங்கம் பகிந்தா (வயது 30), சசிதரன் ஆனந்தி (வயது 41), குமரேசன் ஜெனித்தா (வயது 30), மற்றும் சின்னராசா ஞானேஸ்வரி (வயது 60) ஆகியோரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.

மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த ஆண் ஒருவர் அவ்வூரைச் சேர்ந்த பெண்ணொருவரைக் காதலித்து திருமணம் செய்தமை தொடர்பில் இரு பெண்கள் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இவ்வாறு கைகலப்பாக மாறியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (6)

### ஐ.நா.விசாரணைக் குழுவின்

## இணைப்பாளரை சந்திக்க விடுத்த அழைப்பை மறுத்தது அரசாங்கம்

இலங்கையில் போரின் போது இடம்பெற்ற மீறல்கள் குறித்து விசாரிக்கும் ஐ.நா விசாரணைக்குழுவின், இணைப்பாளர் சன்ட்ரா பெய்டாஸ் அம்மையார், ஜெனீவாவில் உள்ள இலங்கை பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவை சந்திப்பதற்கு விடுத்த அழைப்பை, இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக் குழுவின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள, சன்ட்ரா பெய்டாஸ்க்கும் ஜெனீவாவில் உள்ள இலங்கை பிரதிநிதி ரவிநாத் ஆரிய சிங்கவுக்கும் இடையில் சந்திப்பை ஒழுங்கு செய்யுமாறு ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம பிள்ளை கேட்டிருந்தார்.





எனினும், ஐ.நா விசாரணைக் குழுவின், இணைப்பாளர் சன்ட்ரா பெய்டாஸ் அம்மையாரை, இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க அதிகார பூர்வமாகச் சந்தித்துப் பேசுவதற்கு வாய்ப்பில்லை என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசுக்கு, கடந்த 5ம் திகதி, ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை எழுதிய கடிதம் ஒன்றிலேயே, சன்ட்ரா பெய்டாஸை, ரவிநாத் ஆரியசிங்க சந்திப்பதற்கு ஒழுங்கு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்த விசாரணையைப் புறக்கணிக்க இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ள நிலையில், இந்தச் சந்திப்புத் தேவையற்றது என்று அரசாங்கம்கருதுவதாக கொழும்பு ஆங்கில நாளிதழ்தெரிவித்துள்ளது. (6)

# மக்களை அடகு வைக்க முடியாது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

எமது தனிப்பட்ட விருப்பங்களுக்காக மக்களை அடகு வைக்க முடியாது. வடமாகாணசபை என்னுடைய கனவு. அது என்னுடைய கைகளுக்கு கிடைத்திருந்தால் மூன்றிலிருந்து ஐந்து வருடங்களுக்குள் செல்வம் கொழிக்கும் மாவட்டங்களாக வடமாகாணத்திலுள்ள மாவட்டங்களை மாற்றியிருப்பேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக எனது கைகளுக்கு கிடைக்காமல் போய்விட்டது என்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வாடகை முச்சக்கரவண்டி உரிமையாளருக்கான மரண சகாய நிதி உதவித்திட்டம் அறிமுகப்படுத்தும் விழா இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

"எமது மக்களுக்காகத் தான் நான் அரசியலில் அங்கம் வகிக்கின்றேன். அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதால் தான் நான் மக்களை பாதுகாக்கவோ மக்களுககு உதவவோ வழங்கவோ முடிகிறது


"என்னுடைய தனிப்பட்ட விருப்பங்களுக்காக மக்களை அடகு வைக்க முடியாது. என்றும் மக்களுக்கு உதவ வேண்டுமென்றால் நான் அரசாங்கத்தில் இருக்க வேண்டும். அதிகாரத்தைக் கொண்டுதான் மக்களின் பிரச்சினைகளை, நியாயமான கோரிக்கைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்" என்று சுட்டிக்காட்டினார்.

"முச்சக்கரவண்டி உரிமையாளருக்கான மரண சகாயநிதியோடு மட்டும் நின்றுவிடாது மேலதிகமான வருவாயை ஈட்டக்கூடிய வகையில் பல திட்டங்களை செயற்படுத்தவுள்ளோம்.

முச்சக்கரவண்டி சங்கத்தின் கீழ் அனைத்து சாரதிகளும் பதிவை மேற்கொண்டு சங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்றும் மக்கள் சரியான நிலைப்பாடு எடுக்கின்ற பட்சத்தில் சாரதிகளுக்குரிய ஓய்வூதியம் மற்றும முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு இருக்கின்ற பொலிஸ் மற்றும் தரிப்பிடவசதி பிரச்சினைகளையும் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி என்னால் திட்டங்களைச் செயற்படுத்த முடியும்" என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடுப்பு வலிக்கு வர்ம மருத்துவம்




நவீன வாழ்க்கையில் உணவுமுறை, அன்றாடப் பழக்கவழக்கம் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது. குறிப்பாக ஐடி எனப்படும் தகவல் தொழில் நுட்பத் துறையில் நேரகால வரைமுறை இல்லாமல் இன்றைய தலைமுறையினர் வேலைபார்த்து வருகின்றனர். இரவில் தூங்கி பகலில் விழிப்பது மனித உயிரின் இயற்கை. ஆனால் இவர்களுக்கு இரவு பகல் எந்தக்கணக்கும் இல்லை. உணவுப்பழக்கமும் அப்படியே அலுவலகத்தில் கணினி முன்பு சென்று அமர்ந்தால் பல மணி நேரம் அதே இடத்தில் அசையாமல் உட்காரும் வேலை. இப்படியாக ஒழுங்கான உணவு முறையும் போதிய உடற்பயிற்சியும் இன்றி இன்றைய தலைமுறையினரது உடல் விரைவிலேயே சீர்கெட்டுவிடுகிறது.

முன்னரெல்லாம் 60, 70 வயதில் வந்த அனைத்து நோய்களும் இவர்களுக்கு 30 வயதிலேயே தொடங்கி விடுகிறது. முக்கியமாக இடுப்புப் பகுதி விரைவிலேயே பாதிக்கப்பட்டு விடுகிறது. வலுவிழத்தல், தேய்மானம் போன்றவற்றால் வலி யும், நிமிர்ந்து உட்கார முடியாத நிலையும் ஏற்பட்டு விடுகிறது. இவர்களுக்குமட்டுமன்றி முறையான உணவுப் பழக்கமும் பராமரிப்பும் இல்லாத ஆண், பெண் இருபாலாருக்குமே இத்தகைய இடுப்புவலி ஏற்பட்டு விடுகிறது. தொடர்ச்சியாக இரு சக்கர வாகனம் ஓட்டுபவர்களுக்கும் இடுப்புப் பகுதியில் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன.

இடுப்புப் பகுதியில் வலி ஏற்படுவதற்கான பாதிப்பை வர்ம மருத்துவத்தில் இடுப்பு வாதம் என்று கூறப்படுகிறது. அதிக உழைப்பு, நேரம் தவறிய உணவு, முறையான தூக்கமின்மை இவையே அடிப்படையான காரணங்களாகின்றன. அதிக உழைப்புக்குப் பின் நேரம் தவறி உட்கொள்ளப்படும் உணவு எளிதில் செரிப்பதில்லை. இவ்வாறு செரிக்காத உணவு குடலில் வாயுச்சீற்றத்தை ஏற்படுத்துகிறது. குடலில் ஏற்படும் சீற்றமானது மூலவாயுவின் சீற்றமாக மாறி இடுப்புப் பகுதியில் உள்ள அருகு பற்றி வர்மத்தை தாக்குகிறது. அப்போது இடுப்புப் பகுதியுடன் தொடர்புள்ள அனைத்து நாடி நரம்புகளும் தாக்குதலுக்குள்ளாகின்றன. இத்தகைய வாயுச்சீற்றத்தின் தாக்குதலால். சரநிலை சுவாசத்தின் ஒரு பகுதி பாதிக்கப்பட்டு அந்தப் பக்கம் தசைகளும் எலும்புகளும் இறுக்கம் கொண்டு இழுத்துக்கொள்கின்றன. இத்தகைய தருணத்தில் இடுப்புப் பகுதியில் தாங்கொணாத வலி ஏற்படுவதுடன் நிமிர்ந்து நிற்கவோ, அமரவோ, குனிந்து வேலை செய்யவோ முடி யாத நிலையும் ஏற்படும். வேறு சிலருக்கு சளியின் தொல்லையாலும் இடுப்பு வாதம் ஏற்படுகிறது. சளியினால் ஏற்படும் நீர்ப்பந்தம், சிரசுக்கு ஏறி, அந்த நீரானது கழுத்து, தோள் பட்டை பகுதிகளில் பரவி கடும் வலியை ஏற்படுத்தும். அதேநீரானது முதுகுத் தண்டின் வில்விசை நரம்பு வழியாக இடுப்புப் பகுதிக்கு இறங்கி அப்பகுதியில் தேங்கி தீராத வலியை ஏற்படுத்தும். வில்விசை நரம்பு என்பது தலைப்பாகத்தில் தொடங்கி இடுப்பு வழியாக கணுக்கால் பாதம் வரை கத்திரிக்கோல் வடிவத்தில் இயங்கும் நரம்பாகும். இந்த நரம்புகள்தான் மனிதனை நடக்க, இருக்க, ஓடவைக்கும் நரம்புகள் ஆகும். இந்த நரம்பு செயலற்றுப் போனால் மனிதனின் இயக்கமும் செயலற்றுப் போகும். நடக்கவோ,நகரவோ கூட முடியாத நிலை ஏற்பட்டு விடும். அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வில்விசை நரம்பு நீரினாலோ வாயுச்சீற்றத்தாலோ தாக்குதலுக்கு உள்ளாகும்போது இடுப்புப் பகுதியின் இயக்கம் பாதிக்கப்பட்டு கடும் வலியும் ஏற்படுகிறது. இந்தக் காரணங்கள் போக, மேலும் சில பாதிப்புக்களாலும் இடுப்பு வலி ஏற்படுகிறது. இடுப்பு எலும்பு காலப் போக்கில் அவரவர் உடல்வாகுக்கு ஏற்ப தேய்ந்து பலவீனப்படுகிறது. இதனால் இடுப்பு வலி இயல்பாகவே ஏற்படுகிறது. அதுமட்டுமன்றி தசைகளில் ஏற்படும் இறுக்கத்தினாலும் வலி ஏற்படுகிறது. தூக்கமின்மை, மலச்சிக்கல், குடலில் வாயு தொந்தித்தல், தலையில் நீர்கோர்த்தல், இப்படி உடலை சீர்கேடு அடைய வைக்கும் பல்வேறு காரணங்களா லும் இடுப்பு வாதம் ஏற்பட்டு மனிதர்களை இயங்கவிடாமல் செய்கிறது. சரி... இவ்வாறு இடுப்பு வாதத்தால் பாதிக்கப்படும் அனைவருக்கும் ஒரே மாதிரியாக சிகிச்சை முறை போதுமானதா... நிச்சயமாக இல்லை. அவரவர் உடல் வாகுக்குத் தகுந்தவாறு வெவ்வேறு வர்மப்புள்ளிகள் பாதிக்கப்பட்டிருக்கும். அதற்குத் தகுந்தவாறு சிகிச்சை அளிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட நரம்புகளுக்கும் எலும்பு சந்திக்கும் இணைப்புகளுக்கும் அவற்றுக்குத் தேவையான வர்மப் புள்ளிகளை இயக்கி செயற்பட வைப்பதற்கான சிகிச்சை அளிப்பதன் மூலமே இடுப்பு வாதத்தை முழுமையாகக் குணப்படுத்த முடியும். வாயுச் சீற்றத்தால் ஏற் படும் இடுப்பு வலி க்கு அதனைத் தணித்து வர்மப் புள்ளிகளை இயங்க வைக்க மருந்து கொடுக்க வேண்டும்.



சளித் தொல்லையால் இடுப்பு வாதம் ஏற்பட்டவர்களுக்குமுதலில் சளியைப்போக்க மருந்து கொடுக்க வேண்டும். சளியின் தீவிரத்தைக் குறைக்காமல் அவர்களது இடுப்பு வலியைநிரந்தரமாகப் போக்கு முடியாது. இவை எல்லாவற் றையும் விட வாயுச் சீற்றம் நீரேற்றம் இவற்றால், வில் விசை நரம்பு பாதிக்கப் பட்டி ருந்தால் அதற்கு தீவிர சிகிச்சை அளிப்பதன் மூலம் மட்டுமே இடுப்பு வலியை குணப்படுத்த முடியும்.

இடுப்பு வலி என்பது ஒரு வாத நோய் என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆண்களுக்கு இத்தகைய இடுப்புவாதம்ஏற்பட்டால்அவர்களுக்கு ஆண்மை குறைவு ஏற்பட வாய்ப்புள்ளது. அதே போல் பெண்களுக்கும் கருத்தரிப்பதிலும் அதன் பின்னர் வயிற்றிலும் குழந்தையை சுமப்பதிலும் சிக்கல்ஏற்படலாம். திருமணமான இளம்தம்பதியர் பலர் இத்தகைய பாதிப்புக்களோடும்மைஅணுகியுள்ளனர்.

எனவே, இடுப்புவலி என்பதை அலட்சியமாக நினைக்காமல் அதன் தீவிரத்தை உணர்ந்து சிகிச்சை பெற வேண்டியது அவசியம். பொதுவாகவே இதுபோன்ற வாத நோய்களுக்கு வர்ம மருத்துவத்தில் மட்டுமே முழுமையான தீர்வு கிடைக்கும். வாதமும் வலியும் வர்ம புள்ளிகளால் ஏற்படுவது வர்மப்புள்ளிகளையும் நரம்புகளையும் வர்ம பரிகாரச் சிகிச்சையின் மூலமாக மட்டுமே சீராக இயங்க வைக்க முடியும்.

அந்த வகையில் இடுப்பு வாதத் திற்கும் வர்ம மருத்துவத்தின் மூலம் மட்டுமே நிரந்தரமாகவும் முழுமையாகவும் தீர்வு காண முடியும் என்பது சித்தர்கள் உணர்ந்து சொன்ன சீரிய உண்மையாகும். ஆக இடுப்பு வலி என்றால் ஏதோ தைல த்தை தடவினால் சரியாகி விடும் என்ற மூடநம்பிக் கையை விட்டொழிக்க வேண்டும்.

# மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்த புதிய நல்லிணக்க பணியகம்

## ஜனாதிபதி செயலணி கலைக்கப்பட்டதையடுத்து நடவழிக்கை

(கொழும்பு)

மீள்குடியேற்றம் மற்றும் அந்த குடும்பங்களுக்கான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்தல் உள்ளிட்ட வடமாகாண அபிவிருத்திப் பணிகளை கையாள்வதற்காக, புதிய நல்லிணக்க பணியகம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் இப்பணிகளை முன்னெடுத்து வந்த ஜனாதிபதி செயலணி செயலிழக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த புதிய நல்லிணக்க பணியகம் உருவாக்கப்படவுள்ளது.

வடமாகாண அபிவிருத்திகளுக்கான ஜனாதிபதி செயலணி இனிமேல் இயங்காது என்று, அமைச்சுக்கள். அரசாங்க திணைக்களங்கள மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கைகளில், ஜனாதிபதி செயலணி இனி நடைமுறையில் இருக்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தமக்கு ஜனாதிபதி செயலணியின் செயலாளர் டி.திவாரட்ண அறிவித்துள்ளதாக மீளகுடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜனக சுகததாஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலணியானது குறிப்பிட்ட காலத்துக்கென நியமிக்கப்பட்டதெனவும் அக்காலம் தற்போது முடிவடைந்து விட்டதெனவும் அறிவிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இன்னும் 23 ஆயிரம் பேர் மீள் குடியேற்றப்பட உள்ளனர். இவர்கள் நலன்புரி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர். பலர், இராணுவ ஆக்கிரமிப்பினால் தமது இடங்களில் குடியேற முடியாமல் உள்ளனர்.

மீள்குடியேற்றம் மற்றும் அந்த குடும்பங்களுக்கான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்தல், வடமாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தி, சமூக உட்கட்டமைப்பு விருத்தி, புனர்வாழ்வு, பொருத்தமான உபாயங்கள், திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதற்காகவே ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டது. இதில் 19 பேர் அங்கம் வகித்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# ஐக்கியத்தை கட்டியமைக்க வேண்டியவர்களாக உள்ளோம்

## முதலமைச்சர் விக்கி வலியுறுத்தல்

தமிழ் மக்களின் ஐக்கியத்துடன் தமிழ் பேசும் மக்களின் ஐக்கியம், ஒடுக்கப்பட்ட மக்களின் ஐக்கியம் என்பவற்றை கட்டியமைக்க வேண்டிய நிலையில் தாங்கள் இருப்பதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 34ஆவது மாநாடு வலுவான ஐக்கியத்தை நோக்கி என்ற தொனிப்பொருளில் கடந்த சனிக்கிழமை யாழில் ஆரம்பமானது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் மற்றும் தோழமைக் கட்சிகளை ஒன்றிணைத்த மாநாடு யாழ். வீர சிங்கம் மண்டபத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழர்கள் பெரும்பான்மையினராக இருந்தனர். இன்று அவர்கள் சிறுபான்மையினராக ஒடுக்கப்பட்டுள்ளனர.

தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்ட பின்னர் முஸ்லிம் மக்களை ஒடுக்குகின்ற செயற்பாடு இலங்கையில் மேற்கொளளப்பட்டு வருகின்றது.

முஸ்லிம் மக்கள் பெரும்பான்மை இனத்தவருடன் சேர்ந்திருந்தால், பிரச்சினை இல்லையென்று பெரும்பான்மையினருடன் இணைந்திருந்தனர். ஆனால், இப்பொழுது சேர்ந்திருந்தவர்களும் பெரும்பான்மையினரால் ஒடுக்கப்படுகின்றனர்.

எனவே, நாங்கள் ஒருமித்து முன்னேறவேண்டிய சகல விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் ஒன்றிணைந்து முஸ்லிம் மக்கள், மலையக மக்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட சிங்கள மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து எமது பாதையில் நாம் முன்னேற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உலகமே ஒரு குடும்பம்"

## பிரேசிலில் பாரதப் பிரதமர் ஆற்றிய உரையிலிருந்து...

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பான பிரிக்ஸ்-இன் (Brics) ஆறாவது மாநாடு பிரேசிலில் ஃபோர்ட்டாலிசாவில் ஜூலை 15 இல் தொடங்கி ஜூலை 17 இல் முடிவுற்றது. இதில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்துக்கு எதிரான. வளரும் நாடுகளின் குரல் ஓங்கி ஒலித்தது. குறிப்பாக, பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் உரை, பிரிக்ஸ் மாநாட்டில் தனிச்சிறப்பாக ஒலித்தது.

இம்மாநாட்டில், வசுதைவ குடும்பகம் (உலகமே ஒரு குடும்பம்) என்ற பாரதப் பண்பாட்டின் அடிநாதத்தை வெளிப்படுத்தி உலகத் தலைவர்களைக் கவர்ந்துள்ளார் நமது பாரதப் பிரதமர் நரேந்திர மோடி.

ஜூலை 16 இல் பிரேசிலியா நகரில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வில் மோடி ஆற்றிய உரையின் சுருக்கம் இது...

"மதிப்பிற்குரிய பிரிக்ஸ் மாநாட்டில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்களே, மரியா தைக்குரிய பிரதிநிதிகளே, பெண்களே, கனவான்களே!

உலகம் தற்போது சந்தித்து வருகிறது. உலகின் பல முக்கிய பகுதிகளில் சச்சரவுகளும் நிலையற்ற தன்மையும் அதிகரித்துள்ளன. இவை வறுமையைச் சமாளிப்பதில் உள்ள சவால்களை அதிகப்படுத்துகின்றன. மேலும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியையும் நிலையான வளர்ச்சி மாதிரியையும் உருவாக்கவும் இந்நிலை சவாலாக உள்ளது.

அமைதி மற்றும் நிலையான சூழ்நிலையை மீண்டும் கொண்டு வருவதே உலகின் அவசரத் தேவையாகும். இதற்காக ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புக்கான புதிய வழிமுறைகளை நாம் ஏற்படுத்த வேண்டும். இந்த அவசிய தேவையைப் பிரிக்ஸ் அமைப்பால் பூர்த்தி செய்ய முடியும். நாம் இவ்வாறு நம்புவதற்கு காரணம், சர்வதேச அமைப்புகளில் பிரிக்ஸுக்கு உள்ள தனித்தன்மையே.

ஏனென்றால், மற்ற அமைப்புகள் (உலக வங்கி, சர்வதேச நிதியம் போன்றவை), வளர்ச்சி அடைந்த நாடுகளின் கூட்டமைப்பாகவே உள்ளன. ஆனால், பிரிக்ஸ் வருங்காலத் திறன் என்ற அளவுகோலைக் கொண்டே நாடுகளை ஒன்றுசேர்த்துள்ளது. பிரிக்ஸ்-இன் அடிப்படை நோக்கம் முன்னோக்கிய அம்சமாக வறுமை ஒழிப்பு இடம்பெறுவதும் இதில் அடங்கும். ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் குழு, சர்வதேச நிதி நிறுவனங்கள் போன்ற உலக அமைப்புகளின் நிர்வாக முறையில் சீர்திருத் தங்களை நாம் உடனடியாக வலியுறுத்த வேண்டும்.

உலகவர்த்தக அமைப்பின் ஆட்சிமுறையை வடிவமைப்பதில் நாம் உதவ வேண்டும். வலுவான, சீரான மற்றும் நிலையான உலகப் பொருளாதார வளர்ச்சிக்கு வெளிப்படையான வர்த்தக வளர்ச்சி முறை அவசியம். இது வளர்ச்சி குறித்து வளரும் நாடுகளின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் இருக்க வேண்டும். உலகத்தில் கவனத்தை ஈர்க்கும் செல்வாக்கை பிரிக்ஸ் அடைந்துவிட்டது. நமது நலன்கள் சிறக்க நமது உறவை மேலும் பலப்படுத்த வேண்டும். இந்த வலுவான மன்றத்தை விரவுபடுத்துவது அவசியம். இந்த மாநாட்டைத் தாண்டியும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இயங்க வேண்டும். நமது மாநிலங்கள், நகரங்கள், பிற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையிலான, அடுத்த நிலையிலான பரிமாற்றங்களிலும் நாம் முதன்மையாக விளங்க வேண்டும்.




பிரேசிலில் இருப்பதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். எனக்கு அளித்த விருந்தோம்பலுக்காக பிரேசிலின் குடியரசுத் தலைவர் ரூசெப், பிரேசில் அரசு, மக்களுக்கு என் நன்றி.

இது என்னுடைய முதல் பிரிக்ஸ் மாநாடு. உண்மையாகவே இது ஒரு செறிவூட்டும் அனுபவம். இங்கு கூடியிருக்கும் உலகத் தலைவர்களின் உள்நோக்கப் பார்வையிலும் தொலைநோக்குச் சிந்தனைகளிலும் நான் பலவற்றைக் கற்றுக்கொண்டேன். இங்கிருக்கும் ஒருவொரு தலைவருடனும் தனிப்பட்ட உறவை வளர்த்துக் கொள்ளும் அரிய வாய்ப்பைப் பெற்றதில் பெருமையடைகிறேன். வரும் நாட்களில் இந்த உறவு மேலும் வலிமை பெறும் என்று எதிர்பார்க்கிறேன்.

### வரலாற்றுத் தருணம்:

வரலாற்றில் முக்கிய தருணத்தில் இந்த மாநாடு நடைபெறுகிறது. பொருளாதாரத்திலும் அரசியலிலும் பெரும் குழப்பத்தை பார்ப்பதே. அதனால், ஏற்கனவே உள்ள சர்வதேச அமைப்புகளில் பிரிக்ஸ் புதிய கண்ணோட்டத்தையும் வழிமுறைகளையும் சேர்க்கும் என்று நான் நம்புகிறேன்.

அதனால், நம்மிடையிலான உறவும், பிரிக்ஸ் அமைப்பின் வளர்ச்சியும் இந்த அடிப்படை நோக்கத்தைத் தக்கவைப்பதாக இருப்பதை நாம் உறுதிசெய்ய வேண்டும். அமைதியான, சீரான மற்றும் நிலையான உலகத்தை உருவாக்குவதில் பிரிக்ஸ்- இன் குரல் தெளிவாக இருக்க வேண்டும்.

### உறவை வலுப்படுத்துவோம்!

பயங்கரவாதம், இணையப் பாதுகாப்பு, பருவநிலை மாற்றம் போன்ற உலகத்தின் முக்கிய சவால்களை எதிர்கொள்ள நமது ஒத்துழைப்பை இன்னமும் பலப்படுத்த வேண்டும். வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான உலகக் கருத்தை வடிவமைப்பதில் பிரிக்ஸ் முன்னோடிப் பங்கு வகி[illegible] பின்னரான [illegible]

பிரிக்ஸ் நாடுகளின் மக்கள் தொடர்பை மையமாகக் கொண்டு நாம் செயற்பட வேண்டும். புதுமையான கண்டுபிடிப்புக்களை உருவாக்கும் நோக்கோடு பிரிக்ஸ் இளம் விஞ்ஞானிகள் மன்றத்தை நிறுவுதல் ஒரு நல்ல முயற்சியாக அமையும். பிரிக்ஸ் மொழிப் பள்ளிகள் ஆரம்பித்தல், மற்றொரு முயற்சியாக அமையும். அதில் நாம் அனைவரின் மொழிகளும் கற்பிக்கப்படலாம்.

அனைவருக்கும் தரமான கல்வியை அளிக்க பெரிய அளவிலான திறந்த நிலை இணையப் படிப்புகளை ஆரம்பிப்பது பற்றி நாம் பரிசீலிக்க வேண்டும். பிரிக்ஸ் பல்கலைக்கழகம் அமைப்பது குறித்து நாம் ஆய்வு செய்ய வேண்டும். இந்தப் பல்கலைக்கழகம், நம் நாட்டில் உள்ள கல்வி வளாகங்களை இணையம் மூலமாகவும் ஆராய்ச்சி ஒத்துழைப்பு மூலமாகவும் இணைக்க உதவும்.

### இணைந்து உழைப்போம்!

மரியாதைக்குரியவர்களே, நம் அனைவரும் ஒன்றுசேர்ந்து உழைப்பதன்மூலம் நாம் ஒவ்வொருவரும் வெற்றிபெற முடியும் என்று நான் நம்புகிறேன். நாம் ஒவ்வொருவரும் மற்றவருடைய அறிவுத் திறன்கள், ஆதார வளங்களில் பெற்றுள்ள பலத்தை அறிந்து போற்ற வேண்டும். நமது அனுபவங்கள், புதிய கண்டுபிடிப்புக்கள், தொழில்நுட்பங்களைப் பகிர்ந்துகொள்ளும் வழிமுறைகளை வகுக்க வேண்டும். இதன்மூலம் எண்ணற்ற வழிகளைக் கண்டுபிடிக்கலாம். அவையாவன.

♦ மலிவானதும் நம்பகமானதுமான எரிசக்தி தொழில்நுட்பங்களில் நமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுதல்.

♦ செயற்கைக்கோள், தகவல் தொழில்நுட்பம் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பத்தின் பயன்களைக் கொண்டு தரமான கல்வி, சுகாதாரத்தை எளிதில் கிடைக்கச் செய்தல்.

♦ பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே சுற்றுலாத்துறை மேம்பாட்டின் வளர்ச்சியை வடிவமைத்தல்.

♦ பேரழிவு மேலாண்மையில் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுதல்.

♦ விளையாட்டுகளில் ஒத்துழைப்பும் போட்டிகளும்.

உலக உறவுகளில் பொருளாதார சக்திகளின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. வர்த்தகம், சுற்றலாத்துறை, தொழில்நுட்ப, பாரம்பரியம், திறமை போன்ற களங்களுக்கு ஏற்கனவே உள்ள கோட்பாடுகளை மாற்றியமைக்கும் சக்தி உண்டு.

பிரிக்ஸ் கூட்டமைப்பில் உள்ள ஒவ்வொருவரும் தனிப்பட்ட அனுபவம், வளங்களின் கலவையைக் கொண்டுள்ளோம். நாம் நான்கு கண்டங்களைப் பிரதிபலிக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் ஒப்பீட்டு அளவிலான நன்மைகளையும் நிறைவான பலத்தையும் பெற்றுள்ளோம். இவற்றைப் பயன்படுத்தும் வழிமுறைகளைப் பிரிக்ஸ் உருவாக்க வேண்டும். அது நம் அனைவருக்கும் நன்மை செய்யும்.

### பிரிக்ஸ் வளர்ச்சி வங்கி:

இரண்டு ஆண்டுகளுக்கு முன் (2012) டில்லி பிரிக்ஸ் மாநாட்டில் கருவாக உருவான புதிய வளர்ச்சி வங்கி என்ற கனவு, இன்று போர்டலீசாவில் நனவாகியுள்ளது. இந்த பிரிக்ஸ் வளர்ச்சி வங்கி, பிரிக்ஸ் நாடுகளுக்குப் பயன்தருவதுடன், பிற வளரும் நாடுகளுக்கும் ஆதரவாக இருக்கும்.

பிரிக்ஸின் எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்கும் ஏற்பாடானது பிரிக்ஸ் நாடுகளின் பொருளாதார நிலைத்தன்மையைப் பாதுகாக்க புதுக் கருவியாக உள்ளது. உலக நிதிச் சந்தைகளில் நிலையற்ற தன்மை அதிகரித்துள்ள வேளையில் இது ஒரு முக்கிய முயற்சியாகும்.

ஏற்றுமதி, கடன் உறுதி முகமைகளிடையே ஒத்துழைப்புக்களை புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களுக்காக வங்கிகளுக்கிடையிலான ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஆகியவை வேறு சில முக்கியமான நடவடிக்கைகள். இவை பிரிக்ஸ் நாடுகளுக்கு மத்தியிலான ஒத்துழைப்பை ஊக்குவிக்கும். நாம் இன்னமும் லட்சிய நோக்கோடு இருக்க வேண்டும் என்ற நிலையை நாம் அடைந்துவிட்டோம் என்று நான் நம்புகிறேன். உலகின் எதிர்காலத்தை வரையறுக்கும் வாய்ப்பு நமக்குள்ளது.


**வசுதைவ குடும்பகம் அதாவது உலகம் முழுவதுமே ஒரே குடும்பம்** என்ற கருத்து, எங்கள் நாட்டின் பண்பாட்டில் ஆழமாக வேரூன்றியுள்ளது. அத்தகைய மண்ணில் இருந்து வரும் நான் இதனை மாபெரும் பொறுப்பாக ஏற்றுக்கொள்கிறேன். வளரும் உலகத்தின் நம்பிக்கைகள். விருப் பங்களை வலுப்படுத்தும் வகையில் நம் நடவடிக்கைகள் அமைய வேண்டும். இந்த மாநாட்டை ஏற்பாடு செய்த பிரேசில் ஜனாதிபதி தில்மா ரூசெப்புக்கும், இந்நாட்டு மக்களுக்கும் மீண்டும் நன்றி."

இவ்வாறு அமைந்தது அவரது உரை.

*-இணையம்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்பாரா ஜனாதிபதி



## மௌனம் காக்கும் அரசு

(கொழும்பு)

**ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நாளை ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்பாரா என்பது தொடர்பில் அரசாங்கம் மௌனம் காத்து வருகிறது.**

பொதுநலவாய அமைப்பின் தலைவர் என்ற வகையில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், பிரித்தானிய மகாராணி எலிசபெத்தும் இந்நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பதற்கு புலம்பெயர் தமிழர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

பிரித்தானியாவுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னர் விஜயம் செய்திருந்த போது, புலம்பெயர் தமிழர்களின் போராட்டங்களால் அவர் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தார்.

இந்நிலையில் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வுகளில் பங்கேற்க வரும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக கிளாஸ்கோ விளையாட்டு அரங்கு முன்பாக போராட்டம் நடத்த புலம்பெயர் தமிழ் அமைப்புகள் ஏற்பாடுகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றன.

அத்துடன், நாளை பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெறவுள்ள இந்தப் போராட்டத்தில் ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வுகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்பாரா என்பது குறித்து இலங்கை அரசாங்கம் இதுவரை அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை.

இதற்கு முன்னதாக, பொதுநலவாய நாளை முன்னிட்டு லண்டனில் கடந்த மார்ச் மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்றிருந்த நிகழ்வுகளில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்பார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

பொதுநலவாய நாளை முன்னிட்டு லண்டனில் வெஸ்ட் மினிஸ்டர் தேவாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு ஆராதனை மற்றும் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஸ் சர்மா ஏற்பாடு செய்த வரவேற்பு உபசாரம் ஆகியவற்றில் இலங்கை ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளதாக பொதுநலவாய அமைப்பின் செயலகம் அறிவித்திருந்தது.

பொதுநலவாய அமைப்பின் தலைவர் என்ற வகையில் பிரித்தானிய மகாராணி எலிசபெத்துடன் இணைந்து இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இந்நிகழ்வுகளுக்கு தலைமையேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் லண்டன் பயணம் கைவிடப்பட்டுள்ளதாகவும், அவருக்குப் பதிலாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்நிகழ்வுகளில் கலந்து கொள்வார் எனவும் பின்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

புலம்பெயர் தமிழர்களின் எதிர்ப்பைக் கருத்தில் கொண்டே இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் லண்டன் பயணத் திட்டம் கைவிடப்பட்டிருக்கலாம் என்று அப்போது செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# வடக்கின் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணி கலைப்பு

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தலைமையிலான வடக்கின் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணி கலைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஜனாதிபதி செயலணியால் கையாளப்பட்ட விடயங்களைக் கவனிப்பதற்காக நல்லிணக்கத்துக்கான புதிய பிரிவு ஒன்று விரைவில் உருவாக்கப்படவுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் வடக்கின் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணி செயற்படாது என் இலங்கையின் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தேவைக்காக குறித்த காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டே ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டதாகவும், அதன் காலப்பகுதி முடிவடைந்து விட்டதாகவும் ஜனாதிபதி செயலணியின் செயலராகப் பணியாற்றிய டி.திவாரத்னவுக்கு மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர், ஜனக சுகததாச தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்றத்தை கருத்தில் கொண்டு இந்த ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்ட போதிலும், வடக்கிலும் கிழக்கிலும் இன்னமும் 23 ஆயிரம் மக்கள் மீளக் குடியேற்றப்படாமல் முகாம்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி பசில் ராஜபக்ஷ தலைமையில் உருவாக்கப்பட்ட 19 பேர் கொண்ட இந்த ஜனாதிபதி செயலணியே வடக்கில் மீள்குடியேற்றம், புனரமைப்பு, பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட விவகாரங்களைக் கவனித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# தந்தையின் பணத்தை மோசடி செய்த மகள்

(கொழும்பு)

தகப்பனின் வங்கி வைப்பீட்டில் இருந்து நிதி மோசடி செய்த மகளை வெலிமடை மஜிஸ்ரேட் நீதிமன்ற நீதிபதி எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

நிமேகா த சில்வா என்ற பெண்ணுக்கே கடந்த வெள்ளிக்கிழமை இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் தனது தகப்பனை பார்க்கச் சென்ற போது இவருக்கு தெரியாமல் அவரிடம் இருந்த வங்கி ஏ.ரி.எம். அட்டையை திருடி அட்டையின் இரகசிய இலக்கத்தையும் அறிந்த அதன் மூலம் 6 இலட்சத்து 43 ஆயிரத்து 27 ரூபா பணத்தை பெற்று மோசடி செய்துள்ளார்.

இதனை அடுத்து குறித்த பெண்ணின் தந்தை தமது பணத்தேவையை பூர்த்தி செய்ய குறிப்பிட்ட வங்கிக்கு சென்ற போது தமது பணம் மோசடி செய்யப்பட்டிருப்பது தெரிய வந்து வங்கி முகாமையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டை அடுத்து குறிப்பிட்ட வங்கி ஏ.ரி.எம். அறையின் புகைப்பட கருவி மூலம் பணம் மோசடி செய்த குறித்த பெண்ணை வெலிமடை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே நீதிபதி இவ்வாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். (6)

# இன்று ஒரு தகவல்

## கவிதையில் தெரியும் காட்சி

நாம் யார்? நம்முடைய தகுதி என்ன? என்ற நினைப்பு நமக்கு எப்பொழுதும் இருக்க வேண்டும்.

தகுதிக்காக மீறிய நினைப்பு பல சமயங்களில் நம்மை சிக்கலில் கொண்டு போய் விட்டு விடும். ஒரு பூனை இருந்தது. அது தன்னை ஒரு புலியென்று நினைத்துக் கொண்டிருந்தது. தன்னை பற்றிய தகுதிக்கு மீறிய நினைப்பில் அந்தப் பூனை நடந்து போய்க்கொண்டிருந்தது.

அப்பொழுது வழியில் ஒரு பெரிய யானை அமைதியாக நின்று கொண்டிருந்தது.

அந்த யானை பொறுமையாக நின்று கொண்டிருந்ததால் இந்த பூனைக்கு அதனிடம் போய் வாலாட்டிப் பார்க்கலாம் என்று ஒரு ஆசை. உலக இயல்பு தானே இது!

இந்த பூனை யானையின் பக்கமாக போய் அதை சுற்றி சுற்றி வந்தது. உற்றுப் பார்த்தது. வாய் துறு துறுத்தது. வம்பு வளர்க்க ஆரம்பித்தது.

"எல்லோருக்கும் ஒரு பக்கம்தான் வாலிருக்கும். ஆனால் என்ன இப்படி இரண்டு பக்கம் வாலிருக்கிறது" என்றது.

இருந்தாலும் யானை பொறுமையாக பதில் சொன்னது.

"அப்படியில்லை! பின்னால் இருக்கிறது தான் வால். முன்னால் இருப்பது தும்பிக்கை!" என்றது.

பூனை விடுவதாக இல்லை.

"அது சரி! தும்பிக்கை ஏன் அப்படி உருண்டையாக இருக்கிறது? அது எதற்காக?" என்றது.

இதற்கும் அந்த யானை பொறுமையாக பதில் கூறியது.

"ஊற்றில் இருக்கும் தண்ணீரை உறிஞ்சி குடிப்பதற் காகத் தான் அப்படி இருக்கிறது!" என்றது யானை.

"சரி எல்லோருக்கும் பல் வாய்க்குள்ளே தானே இருக்கும். உனக்கு என்ன வெளியில் இருக்கிறது! அதுவுமட இல்லாமல் பெரிதாகவும் நீளமாகவும் இருக்கிறதே" என்று கேட்டது பூனை.

"புலி என்னிடம் வந்து வாலாட்டினால் அந்த சமயத்தில் அதைத் தாக்குவதற்காகத்தான் இப்படி இருக்கிறது!" என்றது யானை.

இதைக் கேட்டதும் பூனை விழுந்து விழுந்து சிரித்தது.

மலை எங்கேயாவது பாயுமா? நீயோ கறுப்பாக இருக்கும் பெரியமலை. உன்னால் எப்படிப் பாயமுடியும். இது முடியாத காரியம் என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தது.

"என் உடம்பை பார்த்து விட்டு தானே மலையென்று சொல்கிறாய்! நான் பாய வேண்டிய அவசியமில்லை! இப்பொழுது உன்னை பாய வைக்கிறேன் பார்!" என்று சொல்லி விட்டு அந்தப் பூனையை அலட்சியமாகத் தூக்கி எறிந்தது யானை!

எங்கேயோ போய் விழுந்த பூனை மெதுவாக எழும்பி நின்று பார்த்தது. தூரத்தில் அந்த யானை இன்னும் பொறு மையாக, ஆனால் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது.

இப்பொழுது தான் அந்த பூனைக்கு ஞானோதயம் பிறந்தது.

"யானை பாய வேண்டிய அவசியமில்லை! அதற்கு நீள மாக தும்பிக்கை இருக்கிறது!" என்பதைப் புரிந்து கொண்டது.

"வலியாரிடம் வாயாடக்கூடாது" என்ற பாடத்தை பூனை கற்றுக் கொண்டது. இந்தக் கபட்சி பாவேந்தர் பாரதிதாசன் கைவண்ணத்தில் ஒரு கவிதையாக உருவெடுத்து வருகிறது.

"இரண்டு பக்கமும் வாலா என்றது பூனை.
எதிரிலே தும்பிக்கை என்றது யானை.
உருண்ட துதிக்கை ஏனோ என்றது பூனை
ஊற்று நீரை உறிஞ்ச என்றது யானை
திரண்டு நீண்ட பல் ஏன் என்றது பூனை
சீறும் புலியைத் தாக்க என்றது யானை
இருண்ட மலை பாயா தென்றது பூனை
எடுத்தெறிந்தது பூனையைப் போய் யானை!"

இந்தக் கவிதையில் ஒரு பாடமும் இருக்கிறது. ஒரு படமும் இருக்கிறது. அதாவது இதைப் படிக்கவும் முடிகிறது. பார்க்கவும் முடிகிறது. வலியாரிடமும் வாயாடக் கூடாது என்பதை சிறியவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒருவன் அப்படித்தான் ஆற்றங்கரையில் பொறுமையாக உட்கார்ந்திருந்த இன்னொருவன் தலையில் போய்க் குட்டினான். அவன் பார்த்தான் உடனே ஒரு ரூபாயை எடுத்து இவன் கையில் கொடுத்தான். அவன் சொன்னான் இந்த ஊரில் இப்படியொரு வழக்கம். யார் குட்டினாலும் ஒரு குட்டுக்கு ஒரு ரூபாய் கொடுப்பார்கள் என்று பொறுமையாக சொன்னான்.

இவனுக்கு மிகுந்த ஆசை. உடனே ஊருக்குள் ஓடினான். கொஞ்ச நேரம் கழித்து திரும்பி அவனிடம் ஓடி வந்தான்.

"உங்கள் பேச்சைக் கேட்டு ஊருக்குள்ளே போய் ஒரு பெரிய ஆசாமி தலையில் ஒரு குட்டு குட்டினேன். ஆனால் அவன் உடனே என்னிடம் இருந்ததை எடுத்து என் கையிலேயே கொடுத்து விட்டான்!" என்றான்.

"என்ன பணமா?" என்றான் அவன்.

"இல்லை! பல்லு!" என்றான் இவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க் குற்றங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை!

(கொழும்பு)

இலங்கையில் யுத்த காலப் பகுதியில் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவானது போர்க் குற்றங்கள் பற்றியும் விசாரணைகளை மேற்கொள்வதாக அந்த ஆணைக்குழுவின் தலைவர் மக்வேல பராக்கிரம பரணஹம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் பரணஹம மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் யுத்த காலத்தில் வடக்கு கிழக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழு, யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் எமது விசாரணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய சர்வதேச நிபுணர் குழுவினை ஜனா திபதி நியமித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச நிபுணர் குழுவின் பிரதிநிதிகளுடன் தற்போதைக்கு சந்திப்பு நடத்தப்பட மாட்டாது எனறும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சர்வதேச நிபுணர்களின் ஒத்துழைப்புடன் விசாரணைகளை மேற்கொள்வதனால் சிறந்த



பலன்களை எதிர்பார்க்க முடியும் என ஜனாதிபதி கருதுவதாக அவரது செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

விசாரணைக் குழுவிற்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச நிபுணர்கள் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பில் அனுபவம் மிக்கவர்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான சர்வதேச அனுபவம் மிக்க நிபுணர்களின் ஒத்துழைப்புடன் விசாரணைகளை முன்னெடுப்பதன் மூலம் விசாரணைகளை காத்திரமானதாக்க முடியும் என ஜனாதிபதி கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணைகளுக்கு அனுமதியளிப்பதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கம் அறிவித்து வருகிறது.

இவ்வாறான ஓர் பின்னணியில் அரசாங்கம் திடீரென சர்வதேச நிபுணர்களை ஈடுபடுத்துவது காத்திரமானது என அறிவித்துள்ளமை அரசியல் வட்டாரத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் சர்வதேச விசாரணைக்குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்திருக்கும் நிலையில் அரசாங்கம் இவ்வாறான திடீர் மாற்றங்களை செய்து வருகின்றமையும் சர்வதேச நிபுணர்களின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் அரசாங்கத்தின் கைகளிலேயே இருப்பதாக அண்மையில் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சுட்டிக்காட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (6)

# அதிபர் நியமனத்திற்கு எதிராக மன்னாரில் கண்டன ஆர்ப்பாட்டம்



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலைக்கு அருட்தந்தை அல்லாத ஒருவரை அதிபராக நியமிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதி ஆர்ப்பாட்ட பேரணி நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் வலயக்கல்வி பணிமனை முன் நடத்தப்பட்டது.

புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் ஏற்கனவே கத்தோலிக்கர் ஒருவர் அதிபராக உள்ளார். உதவியாக பொதுநிலையினர் ஒருவரும் கடமையாற்றுகின்றார்.

குறிப்பாக இப்பாடசாலையில் டிலாசால் சபையைச் சேர்ந்த அருட் சகோதரர்களே நெடுங்காலமாக அதிபராக கடமையாற்றி வருகின்றனர்.

ஆனால் தற்பொழுது மேலதிகமாக அதிபர் தகமையுள்ள பொது நிலையினர் ஒருவரை நியமிக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இதனால் எதிர்காலத்தில் அருட் சகோதரர் ஒருவர் அதிபராகும் சந்தர்ப்பம் பாதிக்கப்படும் என்று தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது அப்பகுதிக்கு வந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப், மன்னார் நகர சபையின் முதல்வர் எஸ்.ஞானப்பிரகாச்ம், அதன் உபதலைவர் யேசுதாசன் ஜேம்ஸ், மற்றும் புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசாலையின் பழையமாணவர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் மன்னார் வலயக் கல்வி பணிப்பாளர் எம்.என்.சியானைச் சந்தித்து தமது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றைக் கையளித்தனர்.

பாடசாலை அபிவிருத்திக் குழு நிர்வாகத்தினால் இவ்விடயம் தொடர்பாக கடிதம் ஒன்று வழங்கப்படுமானால் மேலதிக அதிபர் நியமனத்தை நீக்குவேன் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் உறுதியளித்தார். இந்த நிலையில் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (6)

# புகைப்பாவனையால் நுரையீரல் புற்றுநோய்!

## 23.6 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டஈடு

புகைப்பாவனையால் நுரையீரலில் புற்றுநோய் ஏற்பட்டு மரணமடைந்தவரின் மனைவிக்கு நட்டஈடாக 23.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை (இலங்கை மதிப்பில் சுமார் 3.1 ட்ரில்லியன் ரூபா) வழங்குமாறு அமெரிக்காவின் ஆர்.ஜே. றொனாலட்ஸ் புகையிலை நிறுவனத்துக்கு புளோரிடா நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

புளோரிடாவை சேர்ந்த மைக்கல் ஜோன்சன் என்பவர் குறித்த நிறுவனத்தின் புகையிலைத் தயாரிப்புக்களை பயன்படுத்தினார் என்றும அதனாலேயே அவருக்கு நுரையீரல புற்றுநோய் ஏற்பட்டது என்றும் அவரின் மனைவி சிந்தியா ஜோன் சன் நீதிமன்றில் வாதிட்டார். இது தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் சிந்தியாவுக்கு நட்டஈடாக குறித்த நிறுவனம் 23.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க வேண்டும் என உத்தரவிட்டது.

இந்தத் தீர்ப்பு வரலாற்றில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. (6)

# கல்லால் அடித்துக் கொலை; முதியவர் ஒருவர் கைது

தனது வீட்டில் வாடகைக்கு இருந்த நபரை, கருங் கல்லால் தலை மற்றும் முகத்தில் அடித்துக் கொலை செய்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிலியந்தலை, அளுபோமுல்ல பிரதேசத்தில் நேற்று அதிகாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம, பெற்றுள்ளது. தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இந்த கொலைச் சம்பவம் இடம்பெற றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான 48 வயது நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். உயிரிழந்த நபர் மற்றும் சந்தேக நபர் இருவரும் முச்சக்கரவண்டி சாரதிகளாவர். இந்த சம்பவத்து டன் தொடர்புடைய 60 வயதான சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (6)

# பொன்சேகாவிற்கு நடந்ததே சோபித தேரருக்கும் நடக்கும்

(கொழும்பு)

நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக மாதுலுவாவே சோபித தேரர் களமிறக்கப்படுவாரானால், 2010 ஆம் ஆண்டு பொது வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள இராணுவ தளபதி சரத் பொன்சேகாவுக்கு நடந்த கதியே நேரும் என இளைஞர் விவகாரம் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவிருப்பதாக ஊகத்தின் அடிப்படையில் தகவல்கள் வெளியாகி கொண்டிருக்கின்ற நிலையில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிடுவதற்கு மாதுலுவாவே சோபித தேரரின் பெயர் ஊடகங்களில் முன்மொழியப்பட்டு வருகின்றது. இந் நிலையிலேயே அமைச்சர் டலஸ் அழகப் பெரும மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கலிகமுக பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெறவிருக்கின்ற ஜனாதிபதி தேர்தலின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக மாதுலுவாவே சோபித தேரர் களமிறக்கப்படவுள்ளார் என்ற தகவல் ஊடகங்களில் வெளியாகிக் கொண்டிருக்கின்றது.

அது மாத்திரமன்றி பொது வேட்பாளராக களமிறங்குவதற்கு தயார் என்ற நிலையில் சோபித தேரரும் தெரிவித்து வருகின்றார். 2010 ஆம ஆண்டு நடைபெற்ற ஜனாதபதி தேர்தலின் போது முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா பொது வேட்பாளராக களமிறங்குவதற்கு எதிர்க்கட்சிகளின் தரப்பினரால் உந்தப்பட்டிருந்தார். அதனால் தேர்தல் களத்தில் குதித்த அவர் பல அசௌகரியங்களை சந்தித்தார்.

சரத் பொன்சேகா என்பவர் சுரண்டப்பட்டு வீசப்பட்ட செல்லுபடியற்றதான லொத்தர் சீட்டுக்கு நிகரானவராகவே காணப்பட்டு வருகின்றார். அந்த வகையில் மாது லுவாவே சோபித தேரர் பொது வேடபாளராக களமி றக்கப் படுவாரேயானால் சரத் பொன்சேகாவுக்கு என்ன நடந்ததோ அதுவே சோபித தேரருக்கும் நடக்கும் என்றார். (6)

# தேசிய காங்கிரஸில் இணைகிறார் மஜீத்?

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தவிசாளர் பதவியில இருந்தும், கட்சியின் அதியுயர் பீட உறுப்பினர் பதவியில் இருந்தும் கடந்த வாரம் விலகிக் கொண்ட எம்.அப்துல் மஜீத், அமைச்சர் அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸில் இணையும் சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் நோன்பின் பின்னர் அவர் அதிகார பூர்வமாக கட்சிக்குள் உள்வாங்கப்படவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான இறுதிக் கட்ட பேச்சுவார்த்தைகள் ஓகஸ்ட் முதல் வாரத்தில் கொழும்பில் இடம்பெறவுள்ளதாகவும் கூறப்படுகிறது. எதிர் வரும் பொதுத் தேர்தலில் பொத்துவில் மஜீத்தை, பொத்துவில் மற்றும் சம்மாந்துறை பிரதேசங்களை மையப்படுத்தியும் முன்னாள் கல்முனை மாநகர சபை மேயரான சிராஸ் மீராசாகிபை கல்முனை, நிந்தவூர் பிரதேசங்களை மையப் படுத்தியும் களமிறக்கவும் தேசிய காங்கிரஸ் உயர்மட்டம் வியூகங்களை முன்னெடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மக்களை விவசாயத்தில் ஈடுபடுத்தும் திட்டம் நடைமுறைக்கு!

## மேலதிக பணிப்பாளர் தகவல்

மன்னாரில் தற்போது நிலவும் காலநிலை மாற்றத்தால் மீன்பிடித் துறையானது பாதிப்படைந்துள்ளது. இதன்காரணமாக ஏற்பட்டுள்ள வருமான இழப்பு உணவுப் பற்றாக் குறை போசணைக்குறைபாடு என்பவற்றை எதிர்நோக்கியுள்ள மக்களை விவசாய முயற்சியில் பங்குபற்றச்செய்யும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி அபிவி ருத்தி நிலையத்தின் மேலதிகப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) கலாநிதி சி.ஜே.அரசகேசரி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் மன்னார் தீவில் துள்ளுக்குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவில் மக்களின் பிரதான தொழிலாக மீன்பிடி விளங்குகின்றது. தற்போது ஏற்படும் கால நிலை மாற்றம் காரணமாக மீன்பிடித்துறையானது பாரிய வீழ்ச்சியைக்கண்டுள்ளது

இதனால் இப்பகுதி மக்கள் வருமானம் இழப்பதை மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் உணவுப்பற்றாக் குறையுடன் போசணை குறைபாட்டையும் எதிர்நோக்கவேண்டிய நிலைமை ஏற்படலாம்.

இதனை ஈடு செய்யும் முகமாக உலக தரிசன நிறுவனம் (World Vision), மன்னார் வட பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், கிளிநொச்சி வடமாகாண விவசாய விரிவாக்கற் திணைக்களமும் இணைந்து மண் பரிசோதனை மூலமாக விவசாய முயற்சிக்கு மக்களை பங்கு பற்றச் செய்யும் வேலைத்திட்டத்தினை முன் வைத்தனர்.

இதன்ஆரம்ப கட்ட நடவடிக்கையாக கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் மேலதிக பணிப்பாளர் (ஆராய்ச்சி) கலாநிதி சி.ஜே.அரசகேசரியின் அனுசரணையுடனும் மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பி.அற்புதச் சந்திரனும் இணைந்து மேற்படி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினர்.

பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய மண்ணியல் நிபுணர் கலாநிதி எஸ்.சுதாகர் 46 மண் மாதிரிகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்குரிய இறுதியறிக்கை கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை அரச உயரதிகாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் உத்தியோகபூர்வ ரீதியாக சமர்ப்பிக்கப் பட்டது.

இந்நிகழ்விற்கு மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் மேலதிக பணிப்பாளர்(ஆராய்ச்சி), கலாநிதி சி.ஜே.அரசகேசரி, வடமாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பி.அற்புதச்சந்திரன் மற்றும் இடர்முகாமைத்துவப் பணிப்பாளர் ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட இடர்முகாமைத்துவ பணிப்பாளர், இப்படியான வேலைத்திட்டத்தை மிக சிறப்பாக நடைமுறைப்படுத்தி இடர் காலங்களில் மக்களின் வாழ்வாதாரத்தை தக்க வைத்துக் கொள்ள முடியும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பங்குபற்றிய விவசாயிகள், இத்திட்டத்தை வரவேற்பதுடன் இங்கு புதிய விவசாய நடவடிக்கை அறிமுகத்தையும் வரவேற்றனர்.

இந்நிகழ்வை மன்னார் உலக தரிசன நிறுவனமும் மன்னார் பிரதி மாகாண பணிப்பாளரும் ஒழுங்குபடுத்தியிருந்தனர் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## அதிரடிப் படை மோதியதில் பெண்ணொருவருக்கு காயம்

வவுனியா தர்மலிங்கம் வீதியில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தொன்றின் போது பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பூந்தோட்டத்தை சேர்ந்த வாமதேவன் ரேகா (வயது 35) என்பவரே மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணின் மீது அதிரடிப் படையினரின் துருப்புகாவி வண்டி மோதியதாலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (6)




# ஆலயக் காணியை வழங்க எதிர்ப்பு; தடுத்து நிறுத்துமாறு மகஜரும் கையளிப்பு






(கிளிநொச்சி)

கிளிநொச்சி தொண்டமான்நகர் பொதுக்காணியை தொண்டமான் நகரில் பல்வேறு பொதுத்தேவைகளுக்கு காணிகள் இல்லாத நிலையில் தென்னிலங்கையை சேர்ந்த ஒருவருக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் கொடுக்கும் நடவடிக்கையை கண்டித்து தொண்டமான்நகர் மக்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

இதன் போது வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ள துடன் பாராளுமன்ற உறுப்பினர் சி .சிறீதரன், கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலர் ஆகியோருக்கு மகஜரின் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேசசெயலர் பிரிவில் நகரை அண்டிய பகுதியில் காணப்படும் பழைமை வாய்ந்த கிராமமான தொண்டமான்நகர் பிரதேசத்தில் அமைந்துள்ள ஞானவைரவர் ஆலயத்துக்கு சொந்தமான காணியை 2013ஆம் ஆண்டு தென்னிலங்கையில் உள்ள அரசியல் பிரமுகர் ஒருவரின் பின்புலத்துடன் தனியார் கம்பனி ஒன்றுக்கு கரைச்சி பிரதேச செயலர் தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி சட்டத்திற்கு முரணான வகையில் வழங்கிய போது மேற்படி கிராம மக்களாகிய நாம் 2013 ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி இக்காணி அபகரிப்புக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் வழக்கு தொடர்ந்த நிலையில் 2014ஆம்ஆண்டுஏப்ரல் மாதம் மேற்படி காணி முழுமையாக கோவிலுக்கு சொந்தமானதென தீர்ப்பளிக்கப் பட்டது. ஆனால் தற்போது கடந்த 17ஆம் திகதி அன்று நீதி மன்றத்தால் ஆலயத்திற்கு சொந்த மானது என தீர்ப்பளிக்கப்பட்ட காணியின் ஒரு பகுதியை எமது கிராமத்தின் பொது அமைப்புக் களின் அனுமதி இன்றி அளந்து எல்லைக்கற்களை வைத்துள்ளனர். இதுதொண்டமான் நகர் கிராம மக்களாகிய எமக்கு பெரும் கவலையையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பாரம்பரிய கிராமமான தொண்டமான்நகர் கிராமத்தின் முக்கிய பொதுத்தேவை பயன்பாடுகளான சனசமூகநிலையம், சிறார் முன்பள்ளி, ஆரம்பசுகாதார நிலையம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், அறநெறிப்பாடசாலை விளையாட்டுக் கழகம் போன்றவற்றிற்கு நிரந்தரமான காணிகள் இல்லாத நிலையில் இக்கிராமத்தில் உள்ள மேற்படி பொதுக்காணியை தென்னிலங்கையை சேர்ந்த அரசியல் பின்புலமுள்ள ஒருவருக்கு வழங்குவதில் காட்டும் மிகபிரயத்தனம் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் தொடர்பில் பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளதோடு அவரின் அதிகார துஷ்பிரயோக தன்மையையும் வெளிச்சமிட்டு காட்டியுள்ளது.

இது தொடர்பில் தொண்டமான்நகர் கிராம மக்களாகிய நாம் பலத்த அதிருப்தி அடைந்துள்ளோம். அத்துடன் அதிகார வர்க்க த்தில் உள்ள அதிகாரிகளின் இது போன்ற செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கின்றோம்.

எமது கிராமத்துக்கு சொந்தமான பொதுக்காணிகள் எம்முடைய பொதுத்தேவை களுக்கே பயன்படுத்தப்பட வேண்டுமென்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

எனவே, இவ்விடயம் தொடர்பில தாங்கள் தங்கள் மேலான கவனத்தை செலுத்தி இக் கிராமத்துக்கு சொந்தக் காரர்களாகிய எமக்கு உரிய தீர்வை விரைந்து பெற்றுத் தருவீர்கள் என்று மிகவும் பணி வுடன் வேண்டி நிற்கின்றோம் என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(6-271)

## 11 பாடசாலைகளுக்கு குடிநீர் விநியோகம்

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை கல்விக் கோட்டப் பிரிவிற்குட்பட்ட 11 பாடசாலைகளுக்கு நாளாந்தம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கண்டாவளைக் கோட்டக் கல்வி அதிகாரி வி.இராஜகுலசிங்கம் தெரிவித்தார்.

கண்டாவளைக் கல்விக் கோட்டத்தில் 24 பாடசாலைகள் இருக்கின்ற நிலையில், அவற்றில் குடிநீர்த் தேவையுள்ள 11 பாடசாலைகளுக்கு நாளாந்தம் 6 ஆயிரத்து 500 லீற்றர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் குடிநீர் வழங்கும் நடவடிக்கையிலேயே மேற்படி 11 பாடசாலைகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (6)

## கடும் காற்றினால் கூரைகளுக்கு சேதம்

கிளிநொச்சி மாவட்டத்தில் வீசிய கடும் காற்றினால் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம், கிருஷ்ணபுரம் இராமகிருஷ்ணா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளின தற்காலிக கொட்டகைகளின் (அரை நிரந்தக் கட்டடங்களின்) கூரை களும் நேற்று திங்கட்கிழமை சேதமடைந்துள்ளதாக மேற்படி பாடசாலை அதிபர்கள் தெரிவித்தனர். இரண்டாம் தவணைப் பரீட்சைகள் இடம்பெற்று வரும் நிலையில் இவ்வாறு காற்றில் கூரைகள் தூக்கி எறியப்பட்டுள்ளமையினால் இடநெருக்கடிக்குள்ளாகியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


கிளிநொச்சியில் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக வீசி வரும் காற்றினால் கிளிநொச்சி மாவட்டத்தின் விவேகானந்த நகர், சிவபுரம், பன்னங்கண்டி, உமையாள்புரம் ஆகிய கிராமங்களிலுள்ள 20 தற்காலிக வீடுகளும் கடந்த 16ஆம் திகதி சேதமடைந்தன.

இந்நிலையில், தொடர்ந்து வீசி வருகின்ற காற்றினால் பாடசாலையின் தற்காலிக கொட்டகைகளின் கூரைகளும் சேதமடைந்தன.

மேற்படி இரு பாடசாலைகளும் மக்களின் மீள்குடியேற்றத்தின் பின்னர் மீளவும் 2010 ஆம் ஆண்டு கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், நிரந்தரக் கட்ட டங்களின் பற்றாக்குறையினால் தற்காலிக கொட்டகைகளிலே இன்றும் இயங்கி வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தீனியர்கள் மீதான தாக்குதலை உடன் நிறுத்தும்படி ஐ.நா. வலியுறுத்தல்



காஸா மீது தொடரும் இஸ்ரேலிய படையினர் தாக்குதல்களை உடனடியாக நிறுத்தும்படி ஐ.நா வலியுறுத்தியுள்ளது

காஸா மீது இஸ்ரேல் நடத்தி வரும் வான்வழி மற்றும் தரைப் படை தாக்குதலுக்கு எதிராக ஹமாஸ போராளிகள் தீவிரமாக போராடி வருகின்றனர்.

13 நாட்களாக நீடித்து வரும் இந்த தாக்குதலில் இதுவரை குழந்தைகள், சிறுவர், சிறுமியர் முதியவர்கள், பெண்கள் என மொத்தம் 501 பாலஸ்தீனியர்கள் பலியாகியுள்ளனர். 2ஆயிரத்து 500 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் நேற்றுமுன்தினம் நடந்த தாக்குதலில் மட்டும் நூற்றுக்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

60 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் ஐக்கிய நாடுகள் சபை சார்பில் அமைக்கப்பட்டுள்ள 49 நிவாரண முகாம்களில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். இஸ்ரேல் தரப்பிலும் 18 இராணுவ வீரர்கள் உட்பட 20 பேர் பலியாகியுள்ளனர்.

நிலைமை மோசமடைந்ததையடுத்து, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கி மூன் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அவசரப் பயணம் மேற்கொண்டார். கத்தார் அமீர் ஷேக் தமீம் பின் ஹமாத் அல்-தானியை சந்தித்த பான் கி மூன், 'டோஹா வழியாக நான் விமானத்தில் வந்துக் கொண்டிருக்கும் போதே, காஸா அருகில் உள்ள ஷெஜய்யா பகுதியில் இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உடபட பலர் கொல்லப்பட்டதாக செய்திகளின் மூலம் அறிந்துக் கொண்டேன்.

இந்த கொடூரமான நடவடிக்கையை நான் கண்டிக்கிறேன். பொதுமக்களை பாதிக்கும் இது போன்ற நடவடிக்கைகளின் போது இஸ்ரேல் அதிக கவனத்தை கடைப்பிடிக்க வேண்டும். காஸா பகுதி மீது நடத்தி வரும் தாக்குதல்களை இஸ்ரேல் படைகளும், இஸ்ரேல் மீதான



ரொக்கெட் தாக்குதல்களை ஹமாஸ் படையினரும் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும்' என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதற்கிடையில், ஐ.நா. பாதுகாப்பு சபையின் அவசரக் கூட்டம் அதன் தலைமை செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பங்கேற்ற 15 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள், 2012ஆம் ஆண்டு செய்து கொண்ட போர் நிறுத்த உடன்படிக்கையின்படி, இஸ்ரேல் இராணுவம் மற்றும் ஹமாஸ் போராளிகள் உடனடியாக தாக்குதல்களை கைவிட்டு அப்பகுதியில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

## இந்தியாவைச் சேர்ந்த தீவிரவாதி பலி!



ஆப்கானிஸ்தானில் உள்ள தீவிரவாதக்குழுவில் உறுப்பினராக இருந்த இந்தியர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த தீவிரவாதி அன்வர் பத்கல். இவர் ஆப்கானிஸ்தானில் இயங்கும் அன்சர் உல்தவ்ஹித் உல் ஹிந்த் என்ற தீவிரவாத இயக்கத்தில் இருந்தார். இந்த நிலையில் கடந்த 17ஆம திகதி ஆப்கானிஸ்தான் இராணுவத்துடன் நடந்த துப்பாக்கி சண்டையில் இவர் பலியானார்.

ஷோராபக் மாவட்டத்தில் பாகிஸ்தான் எல்லையில் உள்ள் இராணுவ சோதனை சாவடியில் பாதுகாப்பு பணியில் இருந்த இராணுவ பொலிசாருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடந்தது. அதில் 15 தீவிரவாதிகள் மற்றும் ஒரு பொலிஸ் அதிகாரியும் பலியாகினர்.

பலியான தீவிரவாதிகளில் அன்வர் பத்கலும் ஒருவர். இந்த தகவலை கண்டகார் பொலிஸ் தலைமை அதிகாரி ரக்மத்துல்லா அட்ராபி உறுதிப்படுத்தினார்.

# விமான விபத்தில் பலியானவர்களின் உடல்களை உக்ரைன் கிளர்ச்சியாளர்கள் கடத்தி வைத்துள்ளனர்

## அமெரிக்கா குற்றச்சாட்டு

உக்ரைனில் விழுந்து நொறுங்கிய மலேசிய விமானத்திலிருந்த பயணிகளின் சடலங்களை உக்ரைன் கிளர்ச்சியாளர்கள் கடத்தி வைத்திருப்பதாக அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது.

நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் இருந்து மலேசிய தலைநகர் கோலாலம்பூருக்கு சென்ற பயணிகள் விமானம் உக்ரைனின் கிழக்கு பகுதியில் தரையில் நொறுங்கி விழுந்து விபத்துக்குள்ளானது.

அதில் பயணம் செய்த 298 பேரும் பலியாகினர். இதுவரை விமான விபத்தில் பலியான 219 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றை கிளர்ச்சியாளர்கள் கடத்தி சென்று தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். அந்த உடல்களை டோரஷ் என்ற இடத்தில் குளிர்சாதன புகையிரதப் பெட்டியில் வைத்துள்ளனர். அதற்கு



துப்பாக்கி ஏந்தியவர்கள் பாதுகாப்பு பணியில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவற்றை டொனெஸ்ட் நகருக்கு கொண்டு செல்ல திட்டமிட்டுள்ளனர். இந்த தகவலை உக்ரைன் துணை பிரதமர் வொலோடிமிர் குரோய்ஸ்மேன் தெரிவித்துள்ளார். கடத்தப்பட்ட உடல்களை மீட்க கிளர்ச்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

ஆனால் தன்னாட்சி அதிகாரம் கேட்டு போராடி வரும் டொனெஸ்ட் மக்கள் குடியரசு அமைப்பின் பிரதமர் அலெக்சாண்டர் போரோடாய் திட்டவட்டமாக இதனை மறுத்துள்ளார்.

சிதறி கிடந்த விமான பாகங்களுடன் கறுப்பு பெட்டிகளும் கைப்பற்றப்பட்டன. அவை பத்திரமாக உள்ளன. அதே போன்று மீட்கப்பட்ட உடல்களை கிளர்ச்சியாளர்கள் பாதுகாத்து வருகின்றனர்.

பலியானவர்களின் குடும்பத்தினருக்கு மரியாதை அளிக்கும் வகையில் அவை குளிர்சாதன வசதியுடைய புகையிரத பெட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. உடல்களை ஒப்படைக்க கால தாமதம் ஆகலாம்.

எனவே கடும் வெப்பம் காரணமாக உடல் அழுகி சேதம் ஏற்படும். மேலும் அப்பகுதியில் நாய்கள் மற்றும் காட்டு விலங்குகள் நடமாட்டமும் உள்ளது. அவை விபத்தில் பலியானவர்களின் உடல்களை கடித்து தின்று நாசம் செய்துவிடும். அதனால் உடல்களை பத்திரப்படுத்தி வைத்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த தாக்குதலின் பின்னணியில் ரஷ்யா இருப்பதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றம்சாட்டியுள்ளது. இது குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி பேட்டி அளித்தார்.

உக்ரைன் கிளர்ச்சியாளர்களுக்கு ரஷ்யா பெருமளவில் இராணுவ உதவி அளித்துள்ளது. அவர்களுக்கு டாங்கிகள், ரொக்கெட் லாஞ்சர்கள் மற்றும் ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ரஷ்யாவின் எஸ்.ஏ. 11 ஏவுகணை சிஸ்டம் மூலம் தான் மலேசியன் ஏர்லைன்ஸ் விமானத்தை கிளர்ச்சியாளர்கள் தாக்கியுள்ளனர். அவற்றை வழங்கியதற்கான தொலைபேசி உரையாடல் ஆதாரம் கிடைத்துள்ளது.

அவை தவிர கிளர்ச்சியாளர்களுக்கு ரஷ்ய இராணுவம் பயிற்சி அளித்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

# ரம்மசுன் புயலுக்கு 17 பேர் பலி!

வியட்நாமில் ரம்மசுன் புயலினால் 17 பேர் இறந்துள்ளதாக அந்நாட்டு செய்தி ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது

பிலிப்பைன்ஸ் நாட்டில் கடந்த வாரம் 94 உயிர்களை பறித்தும் சீற்றம் தணியாமல் சீனாவை தாக்கிய சக்தி வாய்ந்த ரம்மசுன் சூறாவளி புயலுக்கு 16 பேர் பலியாகினர்.

நூற்றுக்கணக்கான வீடுகளை தரைமட்டமாக்கி, ஒதுங்க இடமின்றி ஆயிரக்கணக்கான மக்களை தவிக்கவிட்ட ரம்மசுன், நேற்று முன்தினம் வியட்நாமையும் சூறையாடியது. தெற்கு வியட்நாமின் லங்சான் மாகாணத்தை புரட்டிப் போட்ட இந்த புயலுக்கு அப்பகுதியில் வசிக்கும் 17 பேர் பலியாகினர். 11 பேர் மின்னல் தாக்கியும், 6 பேர் வெள் ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும் உயிரிழந்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த புயலின் எதிரொலியாக தலைநகர் ஹனாயில் இருந்து வடகிழக்கே சுமார் 220 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள குவாங் நின் மாகாணத்தின் மோங் காய் நகரில் பெய்த தொடர் மழையால் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. பெருக்கெடுத்தோடிய வெள்ளத்தில் தரைப பகுதியில் இருந்த மண் அடித்துச் செலலப்பட்டதால், இங்குள்ள பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டது.

நிலச்சரிவில் சிக்கி, சில வீடுகள் புதையுண்டு கிடக்கின்றன. புயல் தாகிய பகுதிகளில் வசிக்கும் 5 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களை மீட்ட பேரிடர் மேலாண்மை குழுமத்தை சேர்ந்த மீட்புப் படையினர், அவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்துள்ளனர்.




மலேசியன் ஏர்லைன்ஸ் விமான விபத்தில் இறந்தவர்களுக்காக இந்தியாவின் புத்தகா--யாவில் புத்த பிக்குகள் சிறப்பு பிரார்த்தனை நடத்திய போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்ப அறிவு உடையவனிடம் அதிகாரத்தைக் கொடுத்தால் நேர்மையானவர்களை எல்லாம் விரட்டி அடித்து விடுவான். ~ திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எங்கள் அரசியல் தலைமையை நாங்கள் ஆய்வு செய்ய வேண்டும்

யானையைப் பார்த்த குருடரைப் போல் என்னைப் பார்த்தால் என்ன செய்வேன்? என்றார் ஒரு யோகி. அந்த யோகியின் கருத்துக்குள் இனம் புரியாத கவலை அவரிடம் இருந்திருப்பதை உணர முடியும். இன்றைய நமது தமிழ்ச் சமூகத்தின் நிலைமைப்பாடும் இதுதான்.

எதற்கெடுத்தாலும் விமர்சனம் என்பதற்கு அப்பால் துரோகம், பக்கச்சார்பு, விலைபோய்விட்டார், தேசியத்தை விற்றுவிட்டார், பிரதேசவாதம் என்ற குற்றச்சாட்டுக்கள் மிகவும் மலிந்து விட்டன.

இதன் காரணமாக நல்ல கருத்துக்களை முன்வைக்கக் கூடிய அறிஞர் பெருமக்கள் அமைதியாக இருந்து தமது பெயருக்குக் களங்கம் ஏற்படாதவாறு தம்மைப் பாதுகாத்துக்கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

ஒருவர் கூறுகின்ற கருத்து நிலை என்ன என்று ஆராயாமல் எழுந்தமானமாக அவச்சொற்களை அள்ளி வீசுபவர்களை ஒருகணம் ஆராய்ந்தால், அவர்களே விலை போனவர்கள் என்ற உண்மையை அறிய முடியும்.

கற்புடையவள், ஒழுக்க நெறியில் பிறழ்வு அடைந்த பெண்ணைக்கூட குறைச் சொல் கூற மாட்டாள். இதுவே கற்பொழுக்கத்தின் காத்திரமும் பண்பும் ஆகும்.

ஆனால் ஒழுக்கத்தில் மிகவும் பழுதான ஒரு பெண் கற்புடையவளுக்கும் அவச்சொல் கூறத் தயங்காள். எனவே எவரொருவர் மற்றொருவர் குறித்து கடும் சொற்களைப் பிரயோகிக்கிறாரோ அவர் தொடர்பில் இந்தச் சமூகம் விழிப்பாக இருக்க வேண்டும் என்பது நம் தாழ்மையான கருத்து.

எதிரிகளை விமர்சிப்பதிலும் நாகரிகம் பண்பாடு வேண்டும். ஒரு காலத்தில் பலருக்கு துரோகிப்பட்டம் சூட்டப்பட்டது. ஆனால் அந்தப் பட்டத்தை சூட்டியவர்கள் பலர் பச்சைத் துரோகிகளாக மாறினர் என்ற செய்தியை மறந்துவிட முடியாது.

இன்னும் சிலர் தமிழர்களுக்காகக் குரல்கொடுப்பது போலப் பாசாங்கு செய்துகொண்டு எல்லா மட்டங்களிலும் எல்லாத் தரப்புகளுடனும் நல்லுறவைப் பேணுகின்றனர்.

ஆக, இத்தகையவர்கள் எந்தளவு தூரம் நடிக்க முடியுமோ அந்தளவிற்கு தங்கள் நடிப்பை உச்சமாக்கிக் கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றுகின்றனர் என்ற உண்மை, எம்மில் பலரால் உணரப்படாமல் இருப்பதுதான் எங்களின் வாழ்மானத்துக்கு மூல காரணம் எனலாம்.

என்றைக்குத் தமிழ் மக்கள் தங்களின் உரிமைகளை தாங்களே பாதுகாக்க வேண்டும் என்று நினைக்கிறார்களோ! எங்கள் உரிமையை தமிழ் அரசியல் வாதிகள் மீட்டுத்தரமாட்டார்கள் என்ற யதார்த்தத்தை தமிழ் மக்கள் எப்போது பட்டவர்த்தனமாகப் புரிந்து கொள்கிறார்களோ! அன்றுதான் எங்கள் இனத்திற்கு விமோசனம் கிடைக்கும்.

எங்களின் உரிமைகளை அரசியல் வாதிகள் பார்த்துக்கொள்வார்கள் என்று நினைத்துவிட்டு, ஐந்து ஆண்டுக்கு ஒரு தடவை இடதுகை சிண்ணி விரலில் மை பூசினால் அது போதுமென்று நினைத்தால் எங்களின் எதிர்காலம் சூனியமாகவே இருக்கும்.

ஆக அன்பார்ந்த தமிழ் மக்களே! எங்கள் அரசியல் வாதிகள் என்ன செய்தார்கள்? என்ன செய்கிறார்கள்? என்ன செய்வார்கள்? என்று கடுமையாக ஆராயுங்கள்; உங்கள் ஊரில் கூடி அதனை மதிப்பீடு செய்யுங்கள்; அவர்களிடம் கேள்வி எழுப்புங்கள்; பொருத்தமற்றவர்களை வெளியேற்றுங்கள்; பொருத்தமானவர்களை – புதியவர்களை – தமிழினத்திற்குச் சேவையாற்றக் கூடிய நேர்மையாளர்களை முன்கொண்டு வாருங்கள்; அவர்களை ஆதரியுங்கள். அதுவே ஒரு பலமான அரசியல் தலைமையை எமக்குத் தரும்.

நாம் விழிப்படையாதவரை, நாம் கேள்வி எழுப்பாதவரை எங்களை ஏமாற்றி எங்களைக் கந்தறுத்து அவர்கள் பதவிக் கதிரைகளைப் பற்றிப் பிடிப்பார்கள்.

எங்களுக்குத் தேவை எங்களின் உரிமை, எங்களின் வாழ்வு அதற்காக நாம் சிந்திப்பதும் செயற்படுவதும் எங்கள் உரிமை.

# இலங்கை தமிழர்களை பாதுகாக்க தவறியுள்ளது

## மத்திய அரசின் மீது பாண்டியன் குற்றச்சாட்டு

(புதுடில்லி)

மத்திய அரசாங்கம் இலங்கைத் தமிழர்களை பாதுகாப்பதற்கு தவறியுள்ளதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் டி.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களை பாதுகாக்கவும் அவர்களின் உரிமைகளை உறுதி செய்யவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வட மாகாணத்தில் பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழ் மக்களின் காணிகளை இராணுவத்தினர் அபகரித்து வருவதாகவும், இதற்கு எதிராக மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் உரிமைகளை உறுதி செய்ய வேண்டுமென இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவின் எந்த வொரு பகுதியிலும் இலங்கைப் படையினருக்கு பயிற்சிகள் வழங்கப்படக் கூடாது என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்திய மத்திய அரசாங்கம் காத்திரமான முறையில் செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வடக்கு மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (6)

# சாட்சியமளிக்க தமிழ்மக்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்

## உருத்திரகுமாரன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணைகளில் சாட்சியமளிப்பதற்கு தமிழ் மக்கள் ஆவலுடன் காத்திருப்பதாக நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தின் பிரதமர் வீ.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களில் பாதிக்கப்பட்ட அல்லது சாட்சிகளான தமிழ் மக்கள் சாட்சியமளிப்பதற்கு ஆர்வத்துடன் காத்திருக்கின்றார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாட்சியமளிப்போரின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு இலங்கைக்கு விஜயம்செய்துள்ள போர்த்துக்கல் நாட்டின் பிரதமரிடம் கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழு தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமையவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு விசாரணைகளை ஆரம்பித்ததன் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்யும் முதலாவது வெளிநாட்டுத் தலைவர் போர்த்துக்கல் தலைவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாட்சியமளிப்போரின் உறவினர்கள் மீது படையினர் அடக்குமுறைகளை பிரயோகிக்கக் கூடிய அபாயம் காணப் படுவதாகத் தெரிவித்துள்ளார். (6)

# சுய தொழில் கொடுப்பனவு

(கரணவாய்)

வடக்குமாகாண சமூகசேவைத்திணைக்களத்தினால் வழங்கப்படும் சுய தொழில் கொடுப்பனவுகளை உரியவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.

இதற்கமைய சி.சரோஜினி (கம்பர் மலை), த.தயாழினி (கரணவாய், மேற்கு), உ.சிவகுமாரி (கரணவாய்), யோ.இராஜ விஜமுண்டேஸ்வரி (கரவெட்டி,வடக்கு), சி.இராஜேந்திரன் (கரவெட்டி,தெற்கு) (மாடு வளர்ப்பு), ந.கோடீஸ்வரன் (உடுப்பிட்டி), ந.லங்காதேவி (கரவெட்டி,தெற்கு) (மாடு வளர்ப்பு) ஆகியோர் தமக்கான கொடுப்பனவுகளை, கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-60)

# கலாசார அழிப்பை ஒழிக்க கல்வியை ஆயுதமாக்குவோம்

## யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இடம்பெறும் கலாசார அழிப்புகளுக்கு எதிராக நாம் அனைவரும் கல்வியினை ஆயுதமாக பயன்படுத்தி போராட வேண்டும் என யாழ்.பல் கலைக கழக ஆசிரியர் சங்கத்தலைவர் அமிர்த லிங்கம் இராசகுமாரன் தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை கண்ணகி அம்பாள் தேவஸ்தான வருடாந்த பரிசளிப்பு வைபவம் நேற்றுமுன்தினம் இந்து இளைஞர் மன்ற தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று வடக்கில் இளைஞர்கள் திட்டமிட்ட முறையில் சீரழிக்கப் பட்டு வருகின்றனர்.

சாந்தியும் சமாதானமுமான எதிர் காலத்தை இன்றைய சிறுவர்கள் பெற்றுக்கொள்வதற்கு இவ்வாறான நிகழ்வுகள் ஏற்பாடு செய்து நடத்தப்படவேண்டும்.

இன்று வடக்கில் பெரும் நிதியினை கோயில்கள் வைத்துள்ளன. ஆனால் அந் நிதியினை ஆலயத்தினை சூழவுள்ள மாணவர்களினை கல்வி ரீதியாக வளர்த்தெடுப்பதற்கு பயன்படுத்த வேண்டும்.

தற்போது எமது சமூகத்தில் வக்கிரமானதொரு உணர்வலை திட்டமிட்ட முறையில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

எமக்கிருக்கும் நம்பிக்கை இம் மதங்கள்தான். இவ் மதங்கள் கூறும் ஆன்மக வழியில் நாம் அனைவரும் எமது பிள்ளைகளை வளர்க்க வேண்டும்.

எமது மாணவர்களுக்கு உண்மையினை சொல்லிக் கொடுப்பதற்கு பழக்க வேண்டும். சில நேரங்களில் உண்மை வெளியே சொல்லப்படுவதனால் அசசுறுத்தலுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாகலாம்.

துன்பங்களினைக் கண்டு துவண்டு போனோமேயானால் ஈழத்தில் தமிழினம் என்ற இனம் இல்லாமல் போய் விடலாம். வடக்கில் இடம்பெறுகின்ற மத கலாசார அழிப்புகளினை இனங் கணடு அவற்றுக்கு எதிராக அறிவு ரீதியாக போராட வேண்டும். எமது கடந்த கால போராட்டம் வேறு வழியில் சென்று தற்போது இழக்க முடியாத பல இழப்புகளினை எதிர் நோககியுள்ளோம் ஆகையினால்நாம்கல்வினை ஆயுதமாகக் கொள்ள வேண்டும்.

ஆகையால் எமது மாணவர்கள் பரீடசையில் சித்தி எய்யவில்லை என வேறு வழியில் செல்லாமல் அடுத்த கல்வி முறையினை தெரிவு செய்து முன்னேற வேணடும் என்றார் அவர். (செ-4)

# ஐ.தே.க.மீது நேற்று தாக்குதல்

(கொழும்பு)

ஊவா மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் மொனராகலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளருமான ஜானக திஸ்ஸ குட்டி ஆராய்ச்சிக்கு சொந்தமான கட்சி அலுவலகம் மீது நேற்றுஅதிகாலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெல்லவாய, கந்தபானாகல பிரதேசத்தில் உள்ள அலுவலகமே இனந் தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

தாக்குதலின்போது அலுவலகத் திலிருந்து பொருட்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாக கபே அமைப்பின் நிறை வேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்த தாக்குதலில் [illegible] ஏற்படவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (6)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## மன உறுதியை இழக்காதீர்




- அறிவார்ந்து சிந்திக்கும்போது தான், பிழைகளை நம்மால் அகற்ற முடியும்.
- ஞானம் புறவுலகில் இருந்து வருவது இல்லை. இயல்பாகவே மனிதனுக்குள் எப்போதும் இருக்கிறது.
- மனஉறுதியை எப்போதும் இழக்கக் கூடாது. ஏழை, எளியோரின் மருந்து அது ஒன்றே.
- எல்லாருக்கும் இன்பம் அளிக்கும் ஒரே மாதிரியான பொருள் உலகில் இல்லவே இல்லை.
- தோல்வி இல்லாத வாழ்வால் பயன் உண்டாகாது. வாழ்வின் சுவையே போராட்டத்தில் தான் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலி தனது திறமையை நிரூபிப்பார்

## கவாஸ்கர் ஆதரவு





விராட் கோலி இங்கிலாந்து தொடரில் சிறப்பாக விளையாட தவறினாலும் கண்டிப்பாக தனது திறமையை அவர் நிரூபிப்பார் என கவாஸ்கர் கூறியுள்ளார்.

இந்திய அணியில் இளம் நட்சத்திர வீரர் கோலி இங்கிலாந்து தொடரில் தடுமாறி வருகிறார். நாட்டிங்காமில் நடந்த முதல் டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் ஒரு ஓட்டங்களும் 2ஆவது இன்னிங்ஸில் 8 ஓட்டங்களும் எடுத்தார்.

தற்போது நடந்து வரும் லார்ட்ஸ் டெஸ்டில் முதல் இன்னிங்சில் 25 ஓட்டங்கள் எடுத்த கோலி, 2ஆவது இன்னிங்ஸில் முதல் பந்திலேயே 'டக்' அவுட் ஆனார்.

இந்த 2 டெஸ்டிலும் சேர்த்து அவர் 34 ஓட்டங்களே எடுத்துள்ளார். அதுமட்டுமல்லாது போன இடத்தில் காதலி அனுஷ்கா சர்மாவுடன் ஊர் சுற்றி வருவதாகவும், அதனாலே தொடர்ந்து சொதப்பி வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

லார்ட்ஸ் டெஸ்டில் கோலி ஆட்டத்தை பார்க்க அனுஷ்கா சர்மா மைதானத்துக்கு வந்து இருந்தார். பார்ம் இன்றி தவிக்கும் கோலி தனது காதலியுடன் லண்டனில் சுற்றியதும் ரசிகர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனால் கடும் விமர்சனத்துக்கும் உள்ளாகி இருக்கிறார் கோலி.

இந்த நிலையில் இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் சுனில் கவாஸ்கர் கோலி திறமையை மீண்டும் நிரூபிப்பார் என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், ஒவ்வொரு வீரருக்கும் இதுபோன்ற நிலைமை வரும். இதுபற்றி கவலைப்பட தேவையில்லை. கோலி திறமையான வீரர்.

அவரது அற்புதமான சாதனைகள் பழைய நிலைக்கு திரும்ப உதவும். அவர் தனது திறமையை மீண்டும் நிரூபிப்பார் என்று கூறியுள்ளார். (க)

# அராலி திருமகள் வி.கழகத்தின் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## தெல்லிப்பழை நாமகள் சம்பியன்




அராலி திருமகள் விளையாட்டுக்கழக 34 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமான அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் 32 அணிகள் பங்குபற்றி இறுதிப் போட்டிக்கு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகமும் மாதகல் சென்.தோமஸ் யுத் கழகமும் மோதிக்கொண்டன.

இதில் போட்டி ஆரம்பம் முதல் ஆதிக்கத்தை செலுத்தி வந்த தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் 7 கோல்களையும் மாதகல் சென்தோமஸ் அணி 2 கோல்களையும் பெற்றன. போட்டியில் வெற்றி வாகை சூடிய தெல்லிப்பழை நாமகள் அணிக்கு பிரதம விருந்தினர் வெற்றிக் கேடயத்தை வழங்கி கௌரவித்தார். மேலும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி நா.ஐங்கரனும் வீரர்களுக்கான கேடயங்களை வழங்கி வைத்தார்.

இந்தப் போட்டியில் தொடர் ஆட்டநாயகனாக கனிஸ்ரன், சிறந்த விளையாட்டு வீரனாக யசீலன், சிறந்த கோள் காப்பாளராக சரன்ராஜ் ஆகிய தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக வீரர்களே தெரிவாகியுள்ளனர். (க-23)

# யாழ். பல்கலையில் வர்ண இரவு நிகழ்வு





(மானிப்பாய்)


யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற் கல்வி அலகும் விளையாட்டு அவையும் இணைந்து நடத்திய வர்ண இரவுகள் நிகழ்வில் 117 வீர, வீராங்கனைகள் வர்ண விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந்த வர்ண இரவுகள் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்தவெளி அரங்கில் சனிக்கிழமை இரவு விளையாட்டு அவையின் தலைவர் சி.மயூரன் தலைமையில் நடைபெற்றது.

2013 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பீடங்களுக்கிடையில் இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கும் இந் நிகழ்வில் விருதுகள் வழங்கப்பட்டன.

அந்த வகையில் ஆண்கள் பிரிவில் 53 முழு வர்ண விருதுகளும் 21 அரை வர்ண விருதுகளுமாக மொத்தம் 74 விருதுகளும் பெண்கள் பிரிவில் 33 முழு வர்ண விருதுகளும் 10 அரை வர்ண விருதுகளுமாக 43 விருதுகளும் வழங்கப்பட்டன.

வர்ண விருது வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட இலங்கை வலைப்பந்தாட்ட அணித் தலைவியும் (1997-1998) வெள்ளவத்தை ஹற்றன் நஷனல் வங்கியின் உதவி முகாமையாளருமான திருமதி ஜெயந்தி சோமசேகரம் டி சில்வா ஆகியோர் வீர, வீராங்கனைகளுக்கான விரு துகளை வழங்கி வைத்தார். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் ஏற்பாட்டில் [illegible] போட்டி ஆரம்பமாகியது. அழைக்கப்பட்ட யாழ். மாவட்ட 17 வயதுப் பிரிவு பாடசாலை அணிகள் இப்போட்டிகளில் கலந்து கொண்டன. [illegible] ஆரம்பித்து வைக்கப்படுவதை படத்தில் காணலாம். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இஷாந்த் சர்மா அபாரம்

# இங்கிலாந்தை வென்றது இந்தியா



இங்கிலாந்துக்கு எதிராக லோர்ட்சில் நடந்த 2-வது டெஸ்டில், இந்திய அணி 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. வேகத்தில் மிரட்டிய இந்தியாவின் இஷாந்த் சர்மா 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.


இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

நொட்டிங்ஹாமில் நடந்த முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்த நிலையில் 2-வது டெஸ்ட் போட்டி லண்டனில் உள்ள லோட் மைதானத்தில் கடந்த 17-ம் திக்தி ஆரம்மானது.

முதலினிங்கில் இந்தியா 295, இங்கிலாந்து 319 ஓட்டங்கள் எடுத்தன. 2-வது இனிங்சில் இந்தியா 342 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் 319 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் தமது 2-வது இனிங்சினை தொடங்கிய இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் நான்காம் நாள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 105 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று 5-வதும் இறுதியுமான நாள் ஆட்டம் நடந்தது. 2-வது இனிங்சினைத் தொடர்ந்த இங்கிலாந்து அணிக்கு ஜோ ரூட் (66), மெயின் அலி (39) ஆறுதல் தந்தனர் அடுத்து வந்த மற் பிரையர் (12), பென் ஸ்ரோக்ஸ் (0), ஸ்ரூவேட் பிரோட் (8), அண்டர்சன் (2) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். 2-வது இனிங்சில் இங்கிலாந்து அணி 223 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வி அடைந்தது. பிளங்கெட் (7) ஆட்டமிழக்காமல் இருந்தார்.


பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் இஷாந்த் சர்மா 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.





இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது. 3-வது டெஸ்ட் யூலை 27-ம் திகதி சவுத்தாம்ப்டன் நகரில் தொடங்குகிறது. இந்திய அணி 2011க்கு பிறகு அந்நிய மண்ணில் முதல் வெற்றி பெற்றது. தவிர லோர்ட்ஸ் மைதானத்தில் இந்திய அணி இரண்டாது வெற்றியை பதிவு செய்தது. முன்னதாக 1986-ல் வென்றது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## ஹோட்டலில் பேய் பீதியில் இங்கிலாந்து வீரர்கள்



தாங்கள் தங்கியுள்ள ஹோட்டல் அறையில் பேய் நடமாடுவதாக இங்கிலாந்து வீரர்கள் கூறியுள்ளனர்.

லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து, இந்திய அணிகள் மோதும் 2-வது டெஸ்ட் போட்டி நடந்தது. இங்கிலாந்து வீரர்கள் லண்டனில் புகழ்பெற்ற லாங்காம் ஹோட்டலில் தங்கியுள்ளனர்.

அங்கு இரவு நேரங்களில் இந்த வித்தியாசமான விடயங்கள் நடப்பதாக கூறிய வீரர்கள், தங்களது அறையை மாற்றித்தருமாறு தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருவது இங்கிலாந்து கிரிக்கெட் வாரியத்தை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

இது பற்றி இங்கிலாந்து வேகப் பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் பிரோட் கூறுகையில், நான் இங்கு தங்கியிருந்த போது ஒரு நாள் திடீரென்று பாத்ரூமில் உள்ள குழாய்கள் அனைத்தும் திறந்து கொண்டு தண்ணீர் கொட்டத் தொடங்கியது.

என்ன நடந்தது என்று தெரிந்து கொள்வதற்கு பாத்ரூம் செல்வதற்காக நான் அறையின் விளக்குகளைப் போட்டேன். விளக்கு எரியத் தொடங்கியதும், குழாய்களில் தண்ணீர் வெளியேறுவது நின்றுவிட்டது.

பின்னர் படுக்கலாம் என்று நினைத்து விளக்கை அணைத்தேன் ஆனால் மீண்டும் குழாய்களில் தண்ணீர் கொட்டத் தொடங்கி விட்டது.

இதனால்நான்நிஜமாகவே பயந்து போய் விட்டேன். உடனே வெளியேறி எனது அறையை மாற்றித்தருமாறு கூறினேன்.

அதே போல் ஒரு நாள் நள்ளிரவு 1.30 மணியிருக்கும், நான் அறையில் இருந்த போது, அறைக்குள் வேறு யாரோ இருப்பது போன்று தோன்றியது. இது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மேலும் பேய் பீதி காரணமாக பயந்து போயுள்ள மொயீன் அலியின மனைவியும் அவருடன் அந்த ஓட்டலில் தங்க மறுக்கிறார்.

தற்போது நடைபெறும் டெஸ்ட் போட்டியின் போது ஹோட்டலில் எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை. ஆனால், கடந்த மாதம் இலங்கைக்கு எதிரான தொடரின் போது இங்கு தங்குவது சரிப்பட்டு வரவில்லை என்று கூறியுள்ளார். (க)

## அம்மாவை தேடும் ரொனால்டோ மகன்



போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரர் ரொனால்டோவின் வளர்ப்பு குழந்தை தன் அம்மா யார் என்று அடிக்கடி கேட்டு வருகிறதாம்.

ரியல் மாட்ரிட் கிளப் அணியின் நட்சத்திரம் ரொனால்டோவிற்கு குழந்தைகள் என்றால் ரொம்ப பிடிக்கும் என்பது அனைவருக்கும் தெரியும்.

சமீபத்தில் நடந்த உலகக் கிண்ணப்போட்டிகளில்கூட புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைக்காக தன் தலையில் கோடு போட்டுக் கொண்டு வந்தார் ரொனால்டோ.

இந்நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் அம்மா யாரென்று தெரியாத ஒரு குழந்தையை தனது மகனாக ரொனால்டோ தத்தெடுத்து வளர்த்து வருகிறார்.

தற்போது நான்கு வயது ஆகும் அந்த குழந்தை அம்மா எங்கப்பா இருக்காங்க என்று அடிக்கடி கேட்டு வருகிறதாம்.

இவர்களும் அம்மா சொர்க்கத்தில் இருக்கிறார் என்று சமாளித்து வருகின்றனராம். இந்த குழந்தை ஸ்பெயினில் ரொனால்டோ மற்றும் அவரது அம்மா உடன் வாழ்ந்து வருகிறது.

ரொனால்டோவின் தங்கை எல்மா இது பற்றி கூறுகையில், அவன் அம்மா எங்கே என்று கேட்டுக் கொண்டே இருப்பான். நான் அம்மா சொர்க்கத்தில் இருக்கிறார் என்று கூறுவேன்.

அதற்கு என் அம்மா அப்படி சொல்லாதே அம்மா வெளியூர் சென்று விட்டதாக கூறு பின்னர் அவன் அதை மறந்து விளையாடுவான் என்று கூறுவார் என்று கூறியுள்ளார். (க)

## முதலுதவிச் சேவை

மாவிட்டபுரம் கந்தசாமி ஆலய தேர் உற்சவம் எதிர்வரும் 25-ம் திகதி வெள்ளிககிழமையும், தீர்த்த உற்சவம் 26-ம திகதி சனிக்கிழமை கீரிமலையிலும் நடைபெறவுள்ளது.

மேற்படி இரு தினங்களும் வழமைபோன்று முதலுதவிச் சேவையை நடத்தவுள்ளதால் பிரிவுத் தொண்டர்கள் யாவரும் காலை 7 மணிக்கு ஆலயத்திற்கு சமுகமளிககுமாறு பிரிவுச் செயலாளர் சி.நாகேஸ்வரன் அறியத்தந்துள்ளார். (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி அளவீடு...

காணிகளை அள வீடு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, அங்கு கூடிய பொதுமக்கள், வட மாகாண சபை அமைச்சர், உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் காணி அளவீடு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தொடர்ந்து, அங்கு வந்த அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுபபதிகாரி, இது தொடர்பில் பொதுமக்களுடன்கலந்துரையாடினார். இதன்போது, இந்தக் காணிச் சுவீகரிப்பிற்கு எதிராக தாங்கள் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்துள்ளதாகவும், அவ்வாறானதொரு நிலையில், இந்த காணிகளை அளவீடு செய்ய முடியாது எனவும் பொதுமக்கள் கூறினர்.

அதற்கு பொறுப்பதிகாரி, நீதிமன்ற உத்தரவினை கையளிக்கும்படி கோரியுள்ளார். நீதிமன்ற வழக்கு இலக்கம் மட்டுமே உள்ளது. நீதிமன்ற உத்தரவு இன்னமும் கிடைக்கப் பெறவில்லையென பொதுமக்கள் பதில் கூறினார்கள்.

இதனையடுத்து, நீதிமன்ற உத்தரவு இல்லாமல் காணி அளவீடு செயவதினைத் தடை செய்ய முடியாது. நாங்கள் காணி அளவீடு செய்வதற்கு பாதுகாப்பு வழங்குவோம் என்று பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

எங்களைக்கைது செய்த பின்னரே நங்கள் காணிகளை அளவீடு செய்ய முடியும் என பொதுமக்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர், நிலஅளவையாளர்கள் வந்த வாகனத்தினை சுற்றி அமர்ந்திருந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து அப்பகுதியில் பதற்றமான சூழநிலை ஏற்பட்டது.

சுமார்மூன்று மணித்தியாலங்கள் காணி உரிமையாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக நேற்றையதினமும் காணி அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்படாமல் நில அளவையாளர்கள் திரும்பி சென்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், வடமாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய மக்கள் முனணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், வடமாகாண சபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன், வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சஜீவன், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் கந்தசாமி சதீஸ், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கிஷோர் ஆகியோரும் இப் போராட்டத்தில் காணி உரிமையாளர்களுடன் கலந்துகொண்டனர். (செ-4)

## வைத்தியசாலையில் சடலம் மீட்பு

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை விடுதியினுள் மனநோய் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொணடார். இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது. காலையில நித்திரைவிட்டெழுந்து நடமாடினார் எனவும் அதன் பின்னர் இவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார் எனவும் வைத்தியசாலை அலுவலர்கள் தெரிவிததனர். ஜன்னலில் தூக்கிட்ட நிலையில் இவர் சடலமாக மீட்கப்பட்டார்.

பாத்திமா கோயிலடி, பண்டத்தரிப் பைச் சோந்த பெ.தர்மசீலன் (வயது 36) என்ப வரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். வைத்தியசாலை நிர்வாகத்தினால தெல்லிப்பழை பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிமன்ற நீதிபதி சடலத்தை பிரேத பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (செ-11)

## ஜனாதிபதி முறைமை...

கொண்டு அன்று வெளிப்படுத்திய விமர்சனக் கருத்துக்கள் எல்லாம் இன்று உண்மையில் நிரூபணமாகியுள்ளன என்றார் டியூ குணசேகர.

அரசாங்கத்தின் நிறைவேற்றுத் துறைக்கும் நீதித்துறைக்கும் இடையே மோதல் ஏற்படும். நாடாளுமன்ற உறுபபினர்கள் தரம் தாழ்ந்துபோவார்கள். அமைச்சர்கள் தரம் தாழ்ந்து போவார்கள். அரசியல் கலாசாரம் மாறிப்போகும். இவை எல்லாவற்றையும் அவர் அன்றே எதிர்வு கூறியிருந்தார் அமைச்சர் குணசேகர.

இலங்கையில் தற்போது ஜனாதிபதி ஆட்சி முறையை வைத்திருக்க வேண்டும் என்று எந்தவொரு அரசியல் கட்சியும் கோரவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிறைவேற்று ஜனாதிபதி முறையை கொண்டுவந்த ஐக்கிய தேசியக் கட்சியும் இன்று எங்கள் நிலைப்பாட்டில்தான் இருக்கின்றது.

இந்த ஜனாதிபதி முறையை மாற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் 3 இல் 2 அல்ல 6 இல் 5 பலத்தைக் கூட பெறறுக்கொள்ள முடியும். அரசியலமைப்பில் ஒரு சிறிய திருத்தம் போதும் இதனை மாற்றுவதற்கு எனறும் கூறினார் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் குணசேகர.

ஆட்சி அதிகாரம் தனியொரு மனிதரின் கையில் இருக்கக்கூடாது. நாடாளுமன்றத்திடமே இருக்க வேண்டும் என்றும் மூத்த அமைச்சர் டியூ குணசேகர சுட்டிக்காட்டினார். (செ-11)

## ஆறு ஆண்டு...

டும் என்று பட்டதாரி ஆசிரியர்களுக்கும் 07 மற்றும் 08 ஆண்டுகள் தொடர்ச்சியாக பணியாற்ற வேண்டும் என்று கல்வியியற்கல்லூரி ஆசிரியர்களுக்கும் முன்னர் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அவ்வாறுகட்டாயமாக கடமையாற்றியதன் பின்னர் அவர்கள் தமக்கு வழங்கப்பட்ட பாடசாலைகளில் 6 ஆண்டுகள் கட்டாயமாக கடமையாற்றியபின் இடமாற்றத்துக்காக விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாகிறார்கள் எனும் தீர மானம் நேற்று 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை இடம் பெற்ற மாகாணக்கல்விக்குழுவின் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதாக வடமாகாணசபை உறுப்பினரும் கல்விக்குழு உறுப்பினருமான பா.கஜதீபன் தெரிவித்தார்.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் த.குருகுலராசா தலைமையில் இடம்பெற்ற இக்கூடடத்தில் கல்விக்குழு உறுப்பினர்களான வட்மாகாணசபை பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன், இந்திரராசா, திருமதி மேரி கமலா குணசீலன், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், மாகாணக் கல்விப்பணிப்பாளர் ராஜேந்திரன், வடமாகாண பிரதி மாகாணக்கல்விப்பணிப்பாளர் ராதாகிருஷ்ணன் மற்றும் வடமாகாண விளையாட்டுத்துறைப்பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதனைவிட வடமாகாண கல்வி சார் அபிவிருத்தி தொடர்பான வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டதாகவும் உறுப்பினர் கஜதீபன் மேலும் தெரிவித்தார். (செ-6)

## மகிந்த...

கலந்துரை யாடினார்.

இதன்போது விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் நிறை வடைந்தமை காரணமாக இந்தியாவின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் ஏற்பட்டுள்ளதாக சுவாமி குறிப்பிட்டார்.

இந்த நிலையில் இலங்கையின் பாதுகாப்பு இந்தியாவை பொறுத்தவரை மிகவும் முக்கியமான ஒன்று என்றும் சுவாமி தெரிவித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கடல்வள சுற்றாடல் கற்கைக்கான நிலையம் ஒன்றை நிறுவ இலங்கை விருப்பம் கொண்டுள்ளதாக குறிபபிட்டார்.

சுப்பிரமணியன் சுவாமி தலைமையிலான குழுவில் பாரதிய ஜனதாக் கட்சியின் வெளிநாட்டு கொள்கை வகுப்பாளர் சுரேஸ்பிரபு, ஊடகவியலாளரும் வர்ணனையாளருமான மாதவன் நலபாட் ஆகியோரும் அடங்கியிருந்தனர். (செ-11)

## ஐ.நா சர்வதேச விசா...

பிள்ளையினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு முயற்சித்த போதும், விசா வழங்க இந்தியா மறுத்துள்ளதனால் அந்த முயற்சியும் தோல்வியில் முடிவடைந்தது.

இதேபோன்று பாகிஸ்தானும் இலங்கை மீதான சர்வதேச விசாரணையினை வன்மையாக கணடித்துள்ளதுடன் நிபுணர் குழுவிற்கு விசா வழங்க மறுத்துள்ளது.

மாலைதீவு, பங்களாதேஷ் ஆகிய தெற்காசிய நாடுகளும், இலங்கை மீது சர்வதேச விசாரணையினை தொடுப்பதற்கு இது உரிய தருணமல்ல என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளன.

எனவே அருகிலுள்ள நாடொன்றிலிருந்து விசாரணையை மேற்கொள்ள முடியாது சென்றமை எமக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும.

எனவே இவர்கள் ஒஸ்லோ, லண்டன், ஜெனீவா போன்ற நகரங்களிலிருந்தே விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இவர்கள் இறுதி வரையில் தமது சாட்சியாளர்களை வெளிப்படுத்தப் போவதில்லை.

அத்துடன் இணையதளங்களுக்கூடாக பெற்றுக்கொள்ளப்படும் சாட்சியங்கள் நம்பகத் தன்மையற்றவை. ஆகையினால் இந்த விசாரணை வெற்றியளிப்பதற்கான சாத்தியங்கள் இல்லையெனவும் சட்டத்தரணி பிரதீப மஹாநாம தெரிவித்தார்.

மேலும் நவிபிள்ளை, ஆரம்பத்தில் இலங்கையில் உள்நாட்டு விசாரணைகளின் அவசியத்தினை வலியுறுத்தியிருந்தார்.

அதற்கமைய உள் நாட்டு விசாரணைகளை துரிதப் படுத்தும் நோக்கில் நியமிக்கப்பட்டுள்ள காணாமல் போனோரை கண்டறியும் ஆணைக் குழுவுக்கு சர்வதேச நிபுணர்களின் ஆலோசனைகள் உள்வாங்கப்பட்டுள்ளமையானது அறிக்கையின் பெறுமதி மற்றும் நம்பகத்தன்மையை இரட்டிப்பாக்குமெனவும் அவர் நம்பக்கை வெளியிட்டார். (செ-11)


### மிக குறைந்த விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு—டுபாய் | 19000/= | One way |
| கொழும்பு—சென்னை | 21900/= | Return |
| கொழும்பு—திருச்சி | 22400/= | Return |
| கொழும்பு—டோகா | 26000/= | One way |
| கொழும்பு—அபுதாபி | 26500/= | One way |
| கொழும்பு—மலேசியா | 30000/= | Return |
| கொழும்பு—சிங்கபூர் | 30500/= | Return |
| கொழும்பு—பிரான்ஸ் | 45500/= | One way |
| கொழும்பு—லண்டன் | 44800/= | One way |
| கொழும்பு—ஜேர்மனி | 72300/= | Return |
| கொழும்பு—சுவிஸ் | 86700/= | Return |
| கொழும்பு—கனடா | 105700/= | One way |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்

Nation Popular Travels & Tours

#128, Brown Road, Jaffna
128.பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
Mobile 0773083820 www.nationtravels.com
Hot line 0114651199 Jaffna 0214920920


## தீ விபத்து...

கசசியிலுள்ள மாயவனூர் பகுதியைச சேர்ந்த நித்தியானந்தம் இராஜேஸ்வரி (வயது-53) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வட்டக்கச்சி மாயவனூர் பகுதியிலுள்ள அவரது வீட்டில் கடந்த 10 ஆம்திகதிகாலை குப்பையை கொளுத்தியபோது அதிலிருந்த பெற்றோல் போத்தல் வெடித்து சிதறி குறித்த பெண் தீக்காயங்களுக்குள்ளானார்.

குப்பைக்குள் பெற்றோலுடன் போத்தல் இருப்பதை அறியாமல் தீ மூட்டியதாலேயே மேற்படி விபரீதம் இடம்பெற்றுள்ளது.

தீக்காயங்களுக்குள்ளான குறித்த பெண் உடனடியாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

பின்னர் அங்கிருந்து கடந்த 19 ஆம திகதி மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற றப்பட்டார். இந்நிலையில் நேற்று முன தினம் நள்ளிரவு குறித்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ்.போதனாவைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணையதிகாரி ந.பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். பிரேத பரிசோதனையின்பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-

## நேரடியாக...

எனினும் சிறுமி சந்தேகநபர்களினை அடையாளம் காட்டத் தவறியமையால் சந்தேகநபர்களினை நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று மீண்டும் யாழ்.சிறுவர் நீதி மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த சிறுமி கடற்படையினரால் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டதாக கூறப்படுகின்ற இடம், பாடசாலை சென்றுவருகின்ற வீதிகள் என்பவற்றினை சிறுமியினை அழைத்துச் சென்று விசாரணை செய்யுமாறு பொலிஸாருககு நீதவான் பணித்துள்ளார்.

இந்நில்லயில் குறித்த வழக்கு மீண்டும் எதிர்வரும் 25-ம் திகதி விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (செ-4)

## வடக்கு மாகாண ஆளு...

வலகத்தில் நேற்றுக் காலை இந் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது ஆளுநரும அவருடைய பாரியாரும் மங்கல வாத்தியங்கள் முழங்க ஆளுநர் அலுவலகத்திற்கு அழைத்து வரப் பட்டு ஆளுநரின் செயலாளர் இ.இளங் கோவனால் வரவேற்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம், பௌத்த மத குருமார்களின் விசேட மத வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன.

இவ்வாறு விசேட வழிபாடுகள் இடம்பெற்றிருந்தபோதும் பௌத்த மத குரு முன்னிலையிலேயே ஆளுநர் தனது கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி, ஆளுநரின்செயலாளர் இ.இளங்கோவன், மாகாண எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா, மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா உள்ளிட்ட பல திணைக்களப் பிரதி நிதிகள், அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் உள்ளிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்ற நிலையில், ஆளுநரின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. (செ-4)


A/L 2014

மாணவர்களின் நலன் கருதி 22.07.2014 இல்

மாபெரும் LOGIC கருத்தரங்கு

வளவாளர்கள் :

திரு.S.சயந்தன் திரு.R.P.சர்மா திரு.S.S.மனோகரன்

BEACON கல்வி நிறுவனம் வெலிங்டன் சந்தியடி

➤ அனுமதிக் கட்டணம் 200 /- மட்டுமே

➤ செவ்வாய் (22.07.2014) மு[illegible] பிற்பகல் 2.00 மணிக்கு.

(C-8048)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.